# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 265 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 2, திங்கள் 18.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஅஸ்தமனம்: 18:04

உச்சியில் மஹேல டெஸ்ட்



பக்கம் 18

# இலங்கையின் விசாரணை குறித்து குடைகிறது ஐ.நா.

## கேள்வி மேல் கேள்வியாக அடுக்கியிருக்கிறது கொழும்பு அரசிடம்

கொழும்பு, ஓக. 18
போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக, நம்பகமான – நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பிலும் அது தொடர்பான இராணுவ விசாரணைகள் எந்த நிலையில் உள்ளன என்பது தொடர்பிலும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பதிலளிக்க வேண்டும் என்று இலங்கை அரசை ஐ.நா மனித உரிமைகள் குழு கேட்டுக் கொண்டுள்ளது.
ஜெனிவாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் குழுவின் 112 ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. அந்த அமர்வில் இலங்கை, புருண்டி, ஹெய்டி, மோல்டா, மோன்ரெனிக்ரோ மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தொடர்பான அறிக்கைகள் பரீசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இலங்கை தொடர்பான விவாதம், ஒக்ரோபர் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது.
சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டின், 40 ஆவது பிரிவுக்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வருகிறார் இந்திய பாதுகாப்பு ஆலோசகர்

கொழும்பு, ஓக. 18
இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை நெருக்கப்படுத்திக் கொள்வதற்காக, இந்தியாவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில், கடற்படையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும், காலி கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கு இந்த ஆண்டு எதிர்வரும் டிசம்பர் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இந்த இரண்டு நாள் கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில், இந்தியாவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அண்மையில் நியமிக்கப்பட்ட அஜித் குமார் டோவல் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அஜித் குமார் டோவல் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்ற பின்னர், இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இருக்கும்.
இந்த மாநாட்டின், முதல் நாள் அமர்வில் சிறப்பு உரையாற்ற, அஜித் குமார் டோவலுக்கு பாதுகாப்பு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-5)

## முகம் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட ஆசிரியை

யாழ்ப்பாணம், ஓக.18
முகம், தலை ஆகியவை முற்றாக எரிந்த நிலையில் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவர் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த தர்மராஜா ராஜலக்சுமி (வயது–76) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்

22 ஆம் பக்கம் பார்க்க



## மழைபெய்து நிலம் குளிர்ந்தது

யாழ்ப்பாணம், ஓக.18
சுமார் 8 மாதங்களின் பின்னர் நேற்று வடக்கு மாகாணத்தில் பரவலாக்க் கன மழை பொழிந்துள்ளது.
யாழ்.குடாநாட்டில் குறிப்பிட்ட சில இடங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று அதிகாலை சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு அதிகமான நேரம் மழை பெய்தது.
கடும் வெப்பம், வறட்சியால் துவண்டு போயிருந்த மக்கள் ஓரளவு பெய்த மழையால் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்தனர். யாழ்ப்பாணத்தின் அநேக பகுதிகள் மற்றும் தென்மராட்சியில் மழை பொழிந்ததால் கால நிலை இதமாக இருந்தது.

(விரிவான செய்தி 23ஆம் பக்கத்தில்)

## அதிகாலை வேளையில் பணம், நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.18
வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை, யன்னல் கம்பிகளைக் கழற்றி உள்ளே புகுந்த திருடர்கள் சுமார் 2 இலட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் 2 லட்சம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கொக்குவிலில் நடந்துள்ளது.
அதேவேளை, குறித்த வீட்டுக்கு அருகில் உள்ள வேறோரு வீட்டிலும் திருடர்கள் திருடுவதற்கு முயற்சி எடுத்துள்ளனர். வீட்டினுள் அவர்கள் நுழைந்த போது வீட்டிலுள்ளோர் விழித்து, மின்விளக்குகளை ஒளிரச் செய்ததும், அவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.
இதுகுறித்துப் பொலிஸாருக்கு உடன் அறிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்

22 ஆம் பக்கம் பார்க்க

## பறிக்கப்பட்ட படகுகள் மீள வழங்கப்படாது

### இந்திய மீனவர் விடயத்தில் கடற்றொழில் அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு.ஒகஸ்ட்.18
வடக்கு மாகாண மீனவர்களின் நலன் கருதிப் பறிமுதல் செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களது படகுகள், மீள வழங்கப் பட மாட்டாது என்று தெரிவித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன.
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களது 60க்கும் மேற்பட்ட படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடைமையாக்கப்பட்டுள்ளது.
அவற்றை மீளப் பெற்றுத்தருமாறு இந்திய மீனவர்கள் அந்த நாட்டு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதையடுத்து அது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தப்படும் என்று இந்திய மத்திய அரசு தெரிவித்திருந்தது.
இந்த நிலையில் நல்லிணக்க அடிப்படையில் படகுகளை விடுவிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தால் இந்திய மீனவர்களது அத்துமீறல் தொடர்ந்தும் நடைபெறும் என்று இலங்கை மீனவர்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் பிரச்சினை குறித்த பேச்சு 29 ஆம் திகதியன்று

கொழும்பு, ஓக.18
இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான உயர் மட்டப் பேச்சு எதிர்வரும் 29 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.
இலங்கை, இந்திய மீனவர்க

22 ஆம் பக்கம் பார்க்க

திஸ்ஸவின் தவறான கணிப்பு | பக்கம் 14

## பாப்பரசரின் பயணத்தை தடுக்கவா மர்ம விமானம்

### மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம்

கொழும்பு, ஓக. 18
பாப்பரசரின் மடுப் பயணத்தின்போது பாதுகாப்பைக் காரணம் காட்டி அவரைத் தடுக்கும் நோக்குடனேயே மடுத் திருவிழாவின்போது மர்ம விமானம் பறக்க விடப் பட்டதா என்ற சந்தேகம் பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.
குறித்த விமானம் விமானப் படைக்குச் சொந்தமானதல்ல என்று விமானப் படைப் பேச்சாளர் மறுத்துள்ள நிலையில், மர்ம விமானம் குறித்து இது

22 ஆம் பக்கம் பார்க்க

## தமக்கிடையிலான பிரச்சினைகளை முதலில் சிறுபான்மையினங்கள் பேசித் தீர்க்கட்டும்

### அதன்பின் அரசிடம் போகலாம் என்கிறார் – பஷீர் சேகுதாவூத்

யாழ்ப்பாணம், ஓக.18
சிறுபான்மைக் கட்சிகள் முதலில் தமக்கிடையே உள்ள பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கட்டும். அதில் தீர்க்கப்படாத சிறுபான்மை இனத்தவருக்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் பின்னர் அரசின் மேசைக்குச் சென்று பேசட்டும். தமக்கிடையிலான பிரச்சினைகளை அரசின் மேசைக்குக் கொண்டு சென்று பேசுவதன் மூலம், அவர்கள் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத்

22 ஆம் பக்கம் பார்க்க

# தமது வலையமைப்புகளைப் புலிகள் கட்டியெழுப்ப உதவுகிறது ஐரோப்பா

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பிரியதர்சன யாப்பா



கொழும்பு, ஓக.18
தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை கட்டியெழுப்புவதற்கு ஐரோப்பிய நாடுகள் உதவியளிக்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா.
எப்போதுமே ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளை துவம்சம் செய்து உலகில் மேலும் தமது சக்தியை அதிகரித்துக் கொள்ளவே முயற்சிக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது.
"அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு முன்னால் உள்ள தடைகளை களைவதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐரோப்பிய நாடுகள் தாக்கி வருகின்றன.
ஐரோப்பாவை போன்று அமெரிக்காவும் விடுதலைப் புலிகள் தோற்கடிப்பட்டமையை விரும்பவில்லை. ஏனெனில் அவர்களை பயன்படுத்தியே இலங்கையில் தமது காரியங்களை சாதித்துக்கொள்ள அமெரிக்கா முனைகிறது.
குறித்த நாடுகள் தற்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### டெங்கு; 8,650 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஓக.18
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 8 ஆயிரத்து 650 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நாடு பூராவும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்படி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுஎன்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.
அத்துடன் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 50 ஆயிரத்து 421 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவற்றில் 6 ஆயிரத்து 769 இடங்கள் நுளம்பு பெருகும் வகையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எதிர்வரும் காலங்களிலும் விரிவான பரிசோதனைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளது.
(ற)

### வன்புணர்வு முயற்சி: ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், ஓக.18
பாடசாலை மாணவி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வலி.மேற்கில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் குறித்த மாணவியை, குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் வீடொன்றில் வைத்து வன்புணர்வுக்குட்படுத்த முயற்சித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது விடயம் தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.
அதையடுத்து ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற-106)

## விபத்தில் ஒருவர் சாவு 27 பேர் காயம்





கொழும்பு. ஓக.18
தம்புள்ளை - ஹபரண பிரதான வீதியின் இனமலுவ எனும் பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்றுடன் இராணுவ ட்ரக் வண்டி நேருக்கு நேர் மோதியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன், 27 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்றுக் காலை 7 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், காயமடைந்தவர்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதச் சென்றிருந்த மாணவர்களும் அடங்குகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.
சாரதிகளின் கவனயீனம் மற்றும், வீதி வழுக்கியதன் காரணமாகவே இந்த விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
காயமடைந்தவர்கள் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

### கஞ்சா வைத்திருந்த பெண் கைது

கொழும்பு. ஓக.18
அவிசாவளை - கஹநாவிட பகுதியில் கஞ்சா வைத்திருந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பெண்ணிடம் இருந்து ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (ற)

### மட்டக்களப்பில் புதைகுழி அகழ்வுப்பணி இன்று

மன்னார், ஓக.18
மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் உள்ளது என்று கூறப்படும் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. நீதிமன்ற உத்தரவிற்கமையவே அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவரும் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளார் என்று ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ குணதாச குறிப்பிட்டார்.
ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணைகள் காத்தான்குடியில் அண்மையில் இடம்பெற்றப் போது மனித புதைகுழி தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டது. கிடைத்த முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் நோக்கிலே தமது பிரதிநிதி அகழ்வுப் பணிகளில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்றும் ஆணைக் குழுவின் செய லாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கிறது கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் எஸ்.பி.திஸாநாயக்க



கொழும்பு, ஓக.18
ஆட்சியைக் கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டத்தில் தமிழ்த் தசியக் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கும் அரசை விரட்டியடிப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிர முனைப்பு காட்டி வருகின்றது. வடக்கு மாகாண சபையும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றது. அரசைக் கவிழ்க்கும் நோக்கில் வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.
ஜனாதிபதியையும் அரசையும் துரித கதியில் பதவி கவிழ்க்கும் நோக்கில் சில தரப்பினர் கடுமையான முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# 120 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கையின் பாதுகாப்பு மாநாட்டில்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஓக.18
இலங்கையில் இந்த முறை நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் சுமார் 120 வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று இராணுவம்தெரிவித்துள்ளது.
60க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளே இதில் கலந்து கொள்ள உள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.
இலங்கை இராணுவம் ஒழுங்கு செய்யும் இந்த பாதுகாப்பு மாநாடு 4ஆவது முறையாகவும் இன்று கொழும்பில் ஆரம்பமாக உள்ளது. இந்த மாநாடு இன்றுமுதல்எதிர்வரும்20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்தியாவின் பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமியும் இதில் கலந்து கொள்ள உள்ளார். (ற)

# கொழும்பில் பிச்சை எடுக்கும் வெளிநாட்டுக் குடும்பம்!




கொழும்பு, ஓக.18
இலங்கையில் தற்போது காணப்படும் விலைவாசி ஏற்றம் காரணமாக பிச்சை எடுத்து பிழைப்பவர்களின் எண்ணிக்கையும் நாட்டில் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு பிச்சை எடுப்போர் பெரும்பாலும் இலங்கையர்களாவே இருப்பார்கள்.
ஆயினும் கொழும்பு நகரில் வெளிநாடு ஒன்றைச் சேர்ந்த குடும்பம் ஒன்று பிச்சை எடுத்து வாழ்வதைக் காண முடிந்தது. கொழும்பு பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த வெளிநாட்டு குடும்பம் வாழ்ந்து வருகிறது. இந்த குடும்பத்தில் ஆண், பெண், மூன்று சிறுவயது பெண் பிள்ளைகள் இருக்கின்றனர்.
இலங்கைக்குள் இந்த விதமாக வெளிநாட்டு குடும்பம் பிச்சைக்காரர்களாக மாறியுள்ளமை ஆச்சரியம் தரும் விடயமே. (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 02 திங்கட்கிழமை (18.08.2014)UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 265

# திருமலையில் பள்ளிவாசல் படையினரால் இடித்தழிப்பு

## மக்கள் பார்வையிட அனுமதி மறுப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 18

**திருகோணமலை கரிமலையூற்றில் அமைந்திருந்த பழம் பெரும் பள்ளி வாசல் ஒன்று இராணுவத்தினரால் இடித்தகற்றப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

**திருகோணமலை துறைமுகத்துக்கு அருகில் அமைந்திருந்த இந்தப் பள்ளிவாசல் 2009ஆம் ஆண்டு முதல் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள் வாங்கப்பட்டு அன்றுமுதல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது.**

1920ஆண்டுகளில் அமைக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசல் 2009 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் அதை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். அன்று முதல் முஸ்லிம்கள் அப்பள்ளிக்குச் சென்று தொழுவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

இந்தப் பள்ளிவாசல் தற்காலிகமாகவே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அப்போது கூறிய இரா ணுவத்தினர் அதை விரை வில் விட்டுத் தருவோம் என்று உறுதியளித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று கடலுக்குச் சென்ற மீனவர்கள் இந்தப் பள்ளிவாசல் இருந்த இடம் தெரியாமல் முற்றாக உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். கடந்த இரண்டு நாள்களாக அங்கு கடும் மழை பெய்ததால் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இராணுவத்தினர் பள்ளியை இடித்தழித்துள்ளனர் என்று அருகில் உள்ள மக்கள் தெரிவித் தனர்.

மழைவேளையின்போது இயந்திரங்களைக் கொண்டு கட்டடமொன்று இடிக்கப்படும் சத்தம் தமக்குக் கேட்டது என்றும் அவ்வாறு உடைக்கப்பட்டது பள்ளிதான் என்று இப்போதுதான் தாம் அறிந்தோம் என்றும் அயலவர்கள் மேலும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மதுவரிக் குற்றம்; 5 பேருக்கு தண்டம்

மன்னார், ஒக.18

மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் மடுத் திருவிழாவை முன்னிட்டு 5 தினங்களாக நடத்தப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின் போது மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 5 பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 4 பேருக்கும், அரச சாரயத்தை விற்பனை செய்த ஒருவருக்கும் என 5 பேர் கைது செய்யப்பட்டு மடுத் திருவிழாக் காலத்தில் தற்காலிகமாக செயற்பட்ட தற்காலிக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அதேவேளை மடுத் திருவிழாவின்போது மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆலய நுழைவாயிலில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் நன்மதிப்பை உயர்த்த அமெ. நிறுவனத்துக்கு ரூபா 10 கோடி

### மத்திய வங்கி ஒப்பந்தத்தால் புதிய சர்ச்சை

கொழும்பு, ஏப்.18

இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்தும் பணிகளுக்காக இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவின் பரப்புரை நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதை அடுத்து, மத்திய வங்கிக்கு அதற்கான அதிகாரம் உள்ளதா என்ற புதிய சர்ச்சை உருவாகியுள்ளது.

புளோரிடாவில் உள்ள பிரபலமில்லாத 'லிபேட்டி இன்டர்நஷனல்' என்ற பரப்புரை அமைப்புடன் இலங்கை மத்திய வங்கி 99 மில்லியன் ரூபா பெறுமதியிலான இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளது என்று தகவல் வெளியாகி உள்ளது. மத்திய வங்கியின் பிரதி ஆளுனர் நந்தலால் வீரசிங்க

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளார்.

அதேவேளை, மத்திய வங்கி அமைச்சரவையின் ஒப்புதலை பெறாமலும் இலங்கை வெளி விவகார அமைச்சுடன் கலந்தா லோசிக்காமலும் செய்துள்ள இந்த ஒப்பந்தம் காரணமாக வெளிவிவகார மற்றும் ஊடகத்துறை அமைச்சிற்கான விடயங்களை மத்திய வங்கி கைப் பற்றியுள்ளதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்கா மீது உள் நாட்டில் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புற்றுநோய் தாக்கத்தினாலேயே தமிழ் பெண் சிப்பாய் சாவு

வலி.வடக்கு, ஒக. 18

யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்த பெண் இராணுவச் சிப்பாய் புற்றுநோயாலேயே உயிரிழந்தார். அவரது இறப்புக்கு வேறு காரணங்கள் எவையும் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடத்தப்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்வாதாரத்துக்காக வழங்கிய படகுகளை மீள எடுத்தது 'பாசிக்'

### 4 படகுகளையும் ஒருவரே பயன்படுத்தினார் என்று கூறப்பட்டதை அடுத்தே



முல்லைத்தீவு, ஒகஸ்ட்.18

கொக்கிளாய் பகுதியில் கடற்றொழிலாளர்கள் குடும்பத்துக்கு வாழ்வாதாரமாக கொடுக்கப்பட்ட படகுகளை பயனாளிகளுக்கு தெரியாமலே அவற்றை வழங்கிய பாசிக் நிறுவனம் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்துள்ளது.

பாசிக் நிறுவனத்தால் குறித்த படகுகள் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலை மேற்கொள்ளும் 10 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன.

இந்தப் பயனாளிகள் மாதாந்தம் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு 50 வீதமான பணத்தை செலுத்தி வந்த நிலையில் பயனாளிகளுக்கு தெரியாமலே கடற்கரையில் நங்கூரமிடப்பட்டிருந்த படகுகளை பாசிக் நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதி மக்களிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்துரையாடிய போது, மீளக் குடியேறிய பின்னர் 10 பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் படகுகளும் இயந்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன. அதில் 50 வீதமான பணத்தை மாதாந்தம் கடற்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு திட்டமிட்ட இலங்கையர் பற்றி மலேசியாவிடம் ஆதாரம் கோரியது இந்தியா

கொழும்பு, ஒக.18

தென்னிந்தியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார் என்று கூறப்படும் இலங்கையர் குறித்த ஆதாரங்களைத் தருமாறு மலேசிய அதிகாரிகளிடம் இந்தியா கோரிக்கை விடுத் துள்ளது.

இலங்கையரான முகமது சுலைமான் என்ற நபர் தொடர்பாகவே இந்திய தேசியப் புலனாய்வு முகவர் அமைப்பு மலேசியாவிடம் விவரங்களைக் கோரியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட புலனாய்வுப் பிரிவை சேர்ந்த மூத்த அதிகாரிகள் அண் மையில் மலேசியாவுக்குப் பயணம் மேற்கொண்டு பேச் சில் ஈடுபட்டனர் என்றும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிந்தியாவில் உள்ள தூதரகங்களை தாக்குவதற்கு இலங்கையில் திட்டமிட்டார் என்று மலேசியா அளித்த புலனாய்வு தகவல்களின் பின்னரே இந்திய அதிகாரிகளுக்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

**புதிய வாய்ப்புக்கள் அதிரடியான உற்சவகாலக் கட்டணச் சலுகைகளுடன்**

*U.K படிக்க உழைக்க IELTS தேவையில்லை.
50 ஆயிரம் கட்டணக்குறைப்பு. ஒருவர் மட்டுமே.
19.08.2014 மட்டும்.

*கனடா படிக்க உழைக்க 3 வருடவிசா.
2 இலட்சம் கட்டணக் குறைப்பு. 3 பேருக்கு மட்டுமே.

*செங்கென் விசா- சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி...
100% விசா உறுதிப்பாட்டுடன்- ஒரு இலட்சம் கட்டணக்குறைப்பு

*சைப்பிரஸ், நியூசிலாந்து படிக்க IELTS தேவையில்லை.

*Visit Visa, Student visa, Sponsar
10000/= கட்டணக்குறைப்புடன் (அனைத்தும் நிபந்தனைகளுக்கமைவாக)
முடிவுதிகதி 20.08.2014

**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(51082)(4.3.6)
தொ.பே: 021 221 9016, 021 568 9090



## மரண அறிவித்தல்

### திருமதி சோதிமுத்து இராமநாதன்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிமுத்து இராமநாதன் 16.08.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரையப்பா -சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரையப்பா இராமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை திரவியம், மாதவர் அன்னபூரணம், ஆறுமுகசாமி தங்கரத்தினம் மற்றும் திருமதி வெற்றிவேலு சரஸ்வதி, சி.ஞானச்சந்திரமூர்த்தி (ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் , சுழிபுரம்.

தகவல்:
Dr.பவானி

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கிருஷ்ண ஜெயந்தியில் கலை நிகழ்வுகள்

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இன்றைய தினம் பகல் விசேட பூசை அபிஷேகங்கள் இடம்பெறுவதுடன் இரவு 7 மணிக்கு 'அவதாரம்' என்னும் தலைப்பில் பண்டிதர் பொன். சுகந்தனின் சொற்பொழிவும், 8 மணிக்கு பொலிகண்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களினதும் - 10 மணிக்கு பொலிகண்டி கலை இலக்கிய மன்றத்தினதும் கலை நிகழ்வுகள் நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பும், 1008 சங்காபிஷேகமும்- அதிகாலை 2 மணிக்கு கம்பராமாயணத்தில் சமூகத்துக்கு பெரிதும் வழிகாட்டும் பாத்திரமாக அமைந்தது ராமனா, சீதையா, குகனா, கும்பகர்ணனா என்னும் தலைப்பில் பொன். சுகந்தன் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெறும்.

அதிகாலை 4 மணிக்கு சுவாமி பூந்தண்டிகையில் வலம் வரும் போது வடக்கு வீதியில் இடம்பெறும் உறியடி உற்சவத்துடன் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நிறைவுறும். (ஓ-173)

## பிரதேச சபை உறுப்பினர் மாரடைப்பால் உயிரிழப்பு

வரணி, ஓக.18

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் எட்வேட் டானியல் விஜயரட்னம் (வயது-71) நேற்றுமுன்தினம் இரவு மாரடைப்பால் காலமானார். நெஞ்சு வலி காரணமாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் கிசிச்சை பயனின்றி அங்கு காலமானார்.

தமிழரசுக் கட்சி மூலம் போட்டியிட்டு இவர் குறித்த சபை உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டார். இவர் ஒரு இளைப்பாறிய ஆசிரியர் என்பதுடன், மிருசுவிலைப் வசிப்பிடமாகக் கொண்டவர். இவரது இறுதிச் சடங்குகள் நேற்றைய தினம் இடம்பெற்றது. (வ-122)

## போதையில் பெற்றோலை குடித்துத் தீர்த்தார்

தென்மராட்சி, ஓக.18

போதை தலைக்கேறிய நிலையில் போத்தலில் இருந்த பெற்றோலை எடுத்து மடமடவென்று குடித் துத் தீர்த்தார் இளை ஞர் ஒருவர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பாலாவியில் இடம் பெற்றது.

கொடிகாமம் பாலாவி தெற்கைச் சேர்ந்த 28 வயதுடைய அந்த நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-9)


## வீடு வாடகைக்கு

பொற்பதி வீதி,
கொக்குவிலில் மாடி வீடு
வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 365 2452 (49740) (4.6.3)

## காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வைரவர் கோயிலுக்கு அருகில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (51072) (4.6.3)
தொடர்பு:077 040 0643

## ENGLISH-Group Classes

*O/L Paper Class for Gr.-11
*English Literature from Gr.-9
*English Language from Gr.-6
Contact No.076 703 2047 (50897) (4.6.3)
(Near Jaffna Hindu College)

## பங்காளர் தேவை

யாழ். நகரில் புதிதாக தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்குப் பங்காளர் தேவை.
தொடர்பு: 075 849 7449 (51073) (4.6.3)

## பார் கடைக்கு உடனடியாக வேலை ஆள் தேவை

290, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 714 8884, 021 222 4523,
077 651 1693 (51070) (4.6.3)

## வாடகைக்குண்டு

இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் 2அறைகள், வரவேற்பறை, இணைந்த குளியலறையுடன் வீடும், 1000 (Sqft) சதுர அடி கொண்ட களஞ்சியமும், (Store) வாடகைக்குண்டு. Lava Hospital பின்புறம் தனி வழிப் பாதை, வாகனத் தரிப்பிடவசதிகள் கொண்டது. (50800) (12.3.6)
தொடர்பு:077 776 9260/077 232 8684

## 2015 Chemistry Personal Classes

Basic, inorganic, Organic, Physical,
கடந்தகால வினாக்கள் ஆசிரியரால்
B.Sc. (Cey.) M.Sc. (Cey.) Chemistry
கற்பிக்கப்படும்.
(51056) (4.6.3) தொடர்பு:077 603 8913


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சண்முகம் தணிகாசலம் (சமாதான நீதிவான்)



தோற்றம்
08 . 08 . 1933

மறைவு
29 . 08 . 2013

திதி : நவமி

திருநெல்வேலிப் பதியில் திருமிகு வாழ்வு வாழ்ந்து
பண்பாடு, கலாசாரத்தை பாங்குடன் ஒழுகிநின்று
சிவகாமிப் பதியை நிதம் சீலமுடன் வணங்கி நின்று
ஐம்பது ஆண்டுகள் சிறப்புடன்
இல்லற வாழ்வை இனிதே கண்டு
எங்கு சென்றீர் எம் தெய்வமே உம்புகழ் பரப்பி
உம்பணி தொடர்வோம்.


528, பலாலி வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர், நண்பர்கள். (51079)(7.6.3)

## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் அல்பேட் சின்னத்தம்பி (J.P)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)



திருக்கோயிலைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் அல்பேட் சின்னத்தம்பி நேற்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணி சின்னத்தம்பியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொற்கொடி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலமலர் (வாழைச்சோனை), ஜீவமலர் (திருக்கோயில்), ஜெயசோதி (திருக்கோயில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நோயல் மணிமாறன் (முன்னாள் ஆசிரியர், வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரி), ஜோ மணிவண்ணன் (இத்தாலி), நோபின் சுரேந்திரன் (பேராசிரியர், விலங்கியற்றுறை- யாழ். பல்கலைக்கழகம்), நிஹால் சுரேன்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாநகரசபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைவாணி (கொழும்பு), ஜஸ்மின்பாமிலா (ஆசிரியை - இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), ஹெலன் அமுதா (ஆசிரியை, யா/ ஏழாலை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், அஞ்சலோ (லண்டன்) அன்று (பம்பலப்பிட்டி இந்து கல்லூரி - கொழும்பு), அஞ்சலி (இந்து மகளிர் கல்லூரி வெள்ளவத்தை), மரியா, மதுரி, டெனிஸ் டன்ஷன் (சென். ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்), கன்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (19.08.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (51076)(46.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா திருஞானசம்பந்தர்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா திருஞானசம்பந்தர் 15.08.2014 வெள்ளிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் -செல்லாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-கனகம்மா தம்பதியரின் மருமகளும், திவாகரன் (கொலண்ட்), அனுஷா, கிருஷா (கனடா), சர்மிளா (கனடா), நிருஷா (முன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் தாயாரும், சுஜி (கொலண்ட்), கஜேந்திரன் (நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), சர்வேஸ்வரன் (கனடா), சிறீகந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமியாரும், மகாலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், சரஸ்வதி, தர்மலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமி (கனடா), காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் ஆனந்தராசா, சத்தியசீலன், இரத்தினேஸ்வரி, திருநாவுக்கரசு (கனடா), கமலாதேவி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், திவானுஷன் (கொலண்ட்), நிவேதிகா, ஜதுஸ்மிகா, திவிஷா, ஜனுஷன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (51074)(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### தேவசகாயம் லோறன்ஸ்

(ஓய்வுபெற்ற செயலாளர் - பிரதேச சபை, நெடுங்கேணி)



மண்ணில்
10.09.1941

விண்ணில்
18.07.2014

நாள்கள் முப்பத்தொன்று நகர்ந்தனவே விரைவாக - நீங்கள் இல்லா மண்ணில்
எமக்கேதப்பா நின்மதி மீண்டும் ஒரு பிறப்பொன்று உண்டானால்
எம்மிடமே நீங்கள் வரவேண்டும் காலங்கள் கடந்தாலும் என்றும் - உம்மை
மறவோம் எம் உயிர் உள்ளவரை.

15/1, 3 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம். (51075) (7.6.3)

குடும்பத்தினர்.

## பெருமாள் கோயிலில் இன்றிரவு விசேட இசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.18

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நடைபெறவுள்ளது. கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு இரவு 10 மணி தொடக்கம் 12 மணிவரை விசேட நிகழ்வுகளாக புல்லாங்குழல் இசை, தெய்வீக பேருரை மற்றும் வயலின் சோலோ இடம்பெறும்.

புல்லாங்குழல் இசை: பி.பத்மராஜ், வயலின் கி.பத்மநாதன், மிருதங்கம் சி.துரைராஜா, கடம் து.லதுஷன் ஆகியோர் பங்குபற்றுவர்.

தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் யோ.ஹரிஹரனால் "பாற்கடல் அளந்த பிரான்" எனும் தெய்வீகப் பேருரை இடம்பெறும்.

வயலின் சோலோவில் வயலின்- ப.சியாம் கிருஷ்ணாவும், ப.காயத்திரியும், மிருதங்கம் - சி.துரைராஜாவும், கடம் - து.லதுஷனும் இடம்பெறுவர். (ஓ)

## மலர் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 18

"அருட்சித்தர் குடைச்சுவாமிகளும் யோகமும் மனித மாண்பும்" மலர் வெளியீடு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல 211, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற கட்டடத்தில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ரஜனி குமாரசிங்கம், பதில் நீதிபதியும் சட்டத்தரணியுமான க.கேசவன், தொழிலதிபர் இராமதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சாயிமாதா இராஜேஸ்வரி "குடைச்சுவாமிகளும் ஆன்மிகமும்" என்ற தலைப்பில் சிறப்புரையும், பண்டிதர் வ.ஆ.தங்கமயில் வெளியீட்டுரையையும் குடைச்சுவாமிகள் சேவை செயலாளர் ப.அச்சுதராஜா பதிலுரையையும் வழங்கவுள்ளனர். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

நல்லூர்க்கந்தன் திருவிழாவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து வகையான பூங்கன்றுகளும் அதிரடி விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ் அக்கூரியம் அன்ட் பிளான்ற் பரடைஸ்
917, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
021 561 1242
(60880)(12.3.6)

மணப் பந்தல் விற்பனைக்கு
லெவல்சீற் பந்தல், சொக்கட்டான் பந்தல், மேடை, மணவறை, கதிரை, சமையல் பாத்திரங்கள் என்பன விற்பனைக்குள்ளன.
இவற்றை நேரில் பார்வையிடலாம்.
தொடர்பு: 077 757 4752/077 844 1875
(49739)(4.6.3)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'அறம் செய விரும்பு' என்ற தலைப்பில் இளம் சைவப் புலவர் க.கைலைநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-7)

◆◆◆

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு -திருமதி நவமணி பத்மநாதன், வயலின்- கி.பத்மநாதன், மிருதங்கம் - மா.சிதம்பரநாதன், முகர்சிங்- என்.சதீஷ்குமார். (ஒ)

◆◆◆

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு நடனாஞ்சலி இடம்பெறும். செல்வி சாருநிதா சிவஸ்ரீராம் சபாநாதக் குருக்கள் நிகழ்வில் பங்கு பற்றுகின்றார். (ஒ)

◆◆◆

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'சூர்பனகை' இசைப் பேருரை இடம் பெறும். (ஒ)

◆◆◆

யாழ்ப்பாணம் சின்மயாமிஷன், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் இணைந்து நடத்தும் 'இந்துவாக வாழவோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை நல்லூர் பின் வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'மனத்தூய்மை' என்பதாகும். (ஒ)

◆◆◆

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு கண்டி மயூரநர்த்தன நாட்டியாலய மாணவிகள் வழங்கும் 'நிருத்தியாஞ்சலி' நாட்டிய நிகழ்வு இடம்பெறும். (ஒ)

## கூட்டம்

வரணி, ஓக.18

வரணி இடைக்குறிச்சி விவசாய சம்மேளனப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் சி.துரைராசா தலைமையில் இடம்பெறும் என்று செயலாளர் சி.இராசகுலேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (வ-122)

## புதிய செயற்குழு தெரிவானது


கொழும்புத்துறை,ஓக.18

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க பொது நிலையினர் கழகத்துக்கான புதிய செயற்குழுத் தெரிவு அருட்திரு எம்.வி.ஏ.இரவிச்சந்திரன் அடிகளாரின் நெறிப்படுத்தலில் ம.கீதபொன்கலன் தலைமையில் இடம்பெற்றது.

நடப்பு இரண்டு ஆண்டுகளுக்கான செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் -டி.சி.சி.சந்தியாப்பிள்ளை, உப தலைவர் -திருமதி சாமினி பாலரட்ணம், செயலாளர் -ஜோண்சன், உப செயலாளர்- கு.பலிக்ஸ்மிஸ்பன், பொருளாளர் -திருமதி கலாஜோதி. (ஒ-135)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கடந்த 18.07.2014 இடம்பெற்ற ஊவா வெல்லஸ் பல்கலைக்கழக 4ஆவது பட்டமளிப்பு விழாவில்
Bachelor or Industrial Information Technology (BIIT)
பட்டம்பெற்ற





பிரம்மஸ்ரீ தேவேந்திரக்குருக்கள் ஜகன்மோகன்
அவர்களை கண்ணன் அவதரித்த ஆவணி ரோகினி கிருஷ்ண ஜெயந்தி சிறப்புத் திருநாளாகிய 18.08.2014 இன்று காலை 8.00 மணிக்கு உறியடி உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் சாவகச்சேரி மட்டுவில் தெற்கு கண்ணன் ஆலய அலங்கார உற்சவத்திலும், இதே நாளில் ஆரம்பமாகி பி.ப. 3.00 மணிக்கு மாலை உற்சவமாக 10 தினம் இடம்பெறும் சுன்னாகம் தெற்கு சிவபூதராயப்பெருமான் ஆலய அலங்காரத் திருவிழாவிலும் பிரதமகுருவாக கிரியைகளில் பணியாற்றிவரும் திருவருள் சூழ்நிலையில் பக்திப் பரவச அடியார்களுடன் இணைந்து சிவவிஷ்ணு திருப்பாதம் வணங்கி மேன்மேலும் பட்டங்கள் பலபெற்று உயர்பதவிகள் வகித்து சகல செல்வங்களும் நிறைந்த வாழ்வும் அமைய இறையாசி வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
ஸ்ரீமதி சி.சாரதாம்பாள் (பாட்டி)
பிரம்மஸ்ரீ கி.பிருந்தாபன் (மைத்துனர்)
ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் (B.A)
(ஆசிரியர்-கல்வயல்)

கண்ணன் தேவஸ்தானம்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

ஸ்ரீசிவபூதராயர் தேவஸ்தானம்
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(C/16058)(7.6.3)



பதினேழாம் திருவிழா

## சிறப்பான வாழ்வு தந்திடுவாய்

நல்லையம்பதி யுறை நாயகனே வேல் முருகா
குன்று தோராடி வரும் குமர குருவே, குக நாதா
நல்லூரான் வீதியிலே நாவறண்டு போனவரின்
சுயம் காத்து, வினை போக்க வேலேந்தும் கரம் கொண்டு
விரைந்துமே வந்திடுவாய் விடிவை நீ தந்திடுவாய்
அந்தரிப் போர்க் கருள் புரியும் அறிவொளியே திருக்குமரா
செந்தமிழின் நலன் கர்த்து சிறப்பான வாழ்வு தந்திடுவாய்

*மலரன்னை*

## எம்மினத்தைக் காத்திடுவாய்

நல்லூரான் திருவடியை நாடி வரும் அடியவர்க்கு
நல்லருள் நல்கின்ற நல்லூர்க் கந்தா
கந்தவேளே கடம்பா கார்த்திகேயனே
எம் மினத்தைக் கார்த்திடுவாய் விரைந்து
ஓடோடி உன் தலம் நாடி வந்து போற்றுகிறோம்
பாடி ஆடி நேர்த்திகளை ஆற்றுகிறோம்
நாடி நிற்கும் எம் மினத்தின் துயரந்தன்னை
நொடிப் பொழுதில் தீர்த்திடுவாய் எழுந்து

*வ. காந்திமதிநாதன், கொற்றாவத்தை*

## கந்தா எனைக் கண்டிலையோ

நான் வணங்கும் கடவுள் நானிலத்தில்
நல்லைப் பதியுறை கந்தன் என்பேன்
சொல்லெடுத்து வில் போல் பாட்டாக்கி
அம்பு போல் பக்தி எய்துகின்றேன் அன்பால்
கான மயில் வாகனனின் புன்னகையை
காண்பதற்கே யாவரும் ஓடுகின்றார் அங்கு
கான மழை கருவியிசை காது கொள் மந்திரங்கள்
கந்தா நினைக் கவர்ந்ததனால் எனைக் கண்டிலையோ நீ

*தேஜஸ் பிரணவன்*

## தண்ணளி பெருகும் கண்ணீராறு

திண்மை மிகும் பன்னிரு தோளழகு கண்டேன்
தடையிட்ட கிரௌஞ்சம் பிளந்த வேளையிலே
விண்ணவர்க்கு விடிவளித்த பகலவனாய் கண்டேன்
வேல்கொண்டு சூர்வதம் செய்த வேளையிலே
பண்ணிசை ஓசை வழி தேன்சிந்த கண்டேன்
பைந்தமிழ் திருப்புகழ் பாடும் வேளையிலே
பண்ணவனுக்கு பண்ணவனாக சுவாமிமலையில் கண்டேன்
பிரவண மந்திரப் பொருளுரைத்த வேளையிலே
தண்ணளி பெருகும் கண்ணீராறு கண்டேன்
தையலாரோடு இணைந்து தரிசனமாகும் வேளையிலே
வண்ணமா மயிலேறி வந்திடக் கண்டேன்
வேண்டும் வரமருள நல்லை நால் வீதியிலே

*கலாபூசணம் சிவ. சிவநேசன்*

நல்லைக்கந்தனுக்கு
இன்று பதினெட்டாம் திருவிழா
18.08.2014



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
அம்பிகை புத்தக நிலையம்
இல.246, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொ.பே.: 077 88 75 357
021 561 9294

# வன்னேரிக்குளத்தையும், தேவன்குளத்தையும் இணைக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 18

வன்னேரிக்குளத்தையும் தேவன்குளத்தையும்இணைத்து பெரும் நீர்த்தேக்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டு மென வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் கிராம மக் கள் தொடர்ந்தும் வேண்டு கோள் விடுத்து வருகின்றனர்.

வன்னேரிக்குளத்திலிருந்து சுமார் 375 ஏக்கர் வரையான பயிர்ச் செய்கை நிலங்களுக்கு நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தேவன்குளம் உருவாக்கப் பட்ட நாளிலிருந்து பயன்படுத் தப்படாத நிலையில் காணப் படுகின்றது.

இந்த இரண்டு குளங்களை யும் இணைப்பதன் மூலமாக ஜெயபுரம் கிராம மக்களுக் கென ஒதுக்கப்பட்டுள்ள 526 ஏக்கர் வயல் நிலத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

ஆனால் அங்கு அகற்றப்படாத நிலையில் காணப்படும் செடி கள் இந்தக் குளங்களின் இணைப்புக்குத் தடையாகக் காணப்படுகின்றன.

இந்த இரண்டு குளங்களும் இணைக்கப்பட்டு நீர் தேக்கம் ஒன்று உருவாக்கப்பட்டால் மேலும் 100 ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியும் எனவும் மக்கள் தெரி வித்தனர். (க-18)

## சட்டவிரோத மணல் அகழ்வால் பன்னங்கட்டி கிராமம் பாதிப்பு

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி பன்னங்கட்டிக் கிராம எல்லையில் உள்ள கனகராயன் ஆற்றுப் படுக் கையில் தொடர்ந்து அனுமதி பெறாது மணல் மண் அகழப் படுவதால் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத செயல் காரணமாக அந்தப் பகுதியில் காணப்படும் காட்டு மரங்கள் மற்றும் ஏனைய பயன்தரு மரங்கள் அழிவுறும் நிலை யில் காணப் படுகின்றன.

மேலும் பெரிய குழிகளும் ஏற்பட்டுள்ளன.

அருகில் உள்ள வயல் நிலங் களிலும் மணல் அகழ்வு இடம் பெறுவதால் அவையும் பாதிக் கப்பட்டு வருகின்றன. (க-426)

# புதிதாக நியமனமான ஊழியருக்கு சபை நிதியிலிருந்தே சம்பளம்

### மன்னார் பிரதேச சபை இக்கட்டில்

மன்னார், ஓக.18

மன்னார் பிரதேச சபையின் புதிதாக நியமிக்கப்பட்ட அட்ட வணைப்படுத்தப்படாத ஊழி யர்களுக்கான சம்பளம் உள் ளூராட்சிச் சபையினால் வழங் கப்படாத நிலையில் கடந்த மூன்று மாத காலமாக பிரதேச சபையின் நிதியிலேயே அவர்களுக்கான சம் பளங்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

இதனால் பிரதேச சபையின் சுழற்சி நிதி அற்றுப் போயுள்ளதாக மன்னார் பிரதேச சபைத் தலைவர் மாட்டீன் டயஸ் தெரி வித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

> இந்த நிதி முடக் கம் திட்டமிட்டே மேற்கொள்ளப் படுகின்றது எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளூராட்சிச் சபையினால் எமக்கு வழங்கப்படாத நிலை யில் அவர்களுக்கான கொடுப்ப னவுகளைப் பிரதேச சபைக்குச் சொந்தமான நிதியிலிருந்தே கடந்த மூன்று மாத காலத்துக் கும்மேலாகவழங்கிவருகிறோம்.

இதனால் பிரதேச சபையின் சுழற்சி நிதி குறைவடைந் துள்ள நிலையில் நாளாந்த செலவுகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதுடன் பிர தேச சபையின் பணிகள் முடங் கிப் போயுள்ளன.

இந்த நிதி முடக்கம் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றது எனச் சந்தேகம் ஏற்பட்டுள் ளது. அத்துடன் கடந்த புதன்கிழமை உள்ளூராட்சி சபையினர் குறித்த பணத்தை மீளளிப்புச் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் சபைக் கூட் டத்தில் எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் தீர்மானம் தொடர்பான கடிதம் உள்ளூ ராட்சி சபை ஆணையாள ருக்குக் கடந்த வியாழக்கி ழமை அனுப்பி வைக்கப்பட்ட துடன் அந்தக் கடிதத்தின் பிரதி கள் வடக்கு மாகாண முதல மைச்சருக்கும், ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.- என்றார். (கு)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்திற்கு மேற்குப் பக்கமாக உள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (F/16080) (4.6.3)

தொடர்பு: 021 721 0933, 077 132 6758

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சண்முகநாதன் பிரசாத்**

அன்னை மடிதனில் 05.11.1993

ஆண்டவனடிதனில் 27.07.2013

**நீங்காத "சிரிப்பு" நினைவலைகள்**

இருபதின் வாசலிலே இளமைப் பருவமதில்
இன்பம் பெற்ற மகனாய் வாழ்ந்தவனே!
அமைதியான உன் சுபாவம் அழகான புன்னகை ஆதலால்
சிநேகிதம் தந்த நாமம் சிரிப்பு!

சிந்திக்க முடியாமல் உள்ளதடா - யமன்
உனைக்கவர்ந்த அழைப்பு - இதயத்தில்
இடி வீழ்ந்ததடா நீ மாண்ட விதி
ரணம் தந்ததடா நாம் மாளும் வரை தீராதவலி ஆனதடா!

உள்ளம் சொல்லுதடா பிரியாமல் பிரிந்தாயடா பிரசாத்!
நீயறியாமல் மாட்டினாயடா கனவோடு கண்டது
நியமானதடா உனைப்பிரிந்தபின் உணர்ந்ததடா!
வாழ்வோடு வசந்தம் ஆனவனே சாவோடு வாழ்வைச் சொன்னவனே!

பெற்றோரின் பெருவாழ்வில் காரிருள் சூழ்ந்ததடா!
சிற்றன்னை சிந்தனைகள் சிதறிப்போனாளடா - நீயின்றி
அவள் வாழ்வில் சுவாசம் இல்லையடா! சோதிமலர்
இன்று ஜோதி இன்றிப் போனாளடா!

உடன்பிறந்தோர் உனைப்பிரிந்து உறைந்து போனாரடா
எமதன்புச் சகோதரனே எம் செஞ்சில் வாழ்வாயடா
உறவுக்கும் நட்புக்கும் ஊருக்கும் இனியவனே! அக்கா
என்றழைக்க இல்லையடா ஆசைத்தம்பி!

உனைநினைந்து அனுதினமும் வாடுகின்றோம் அம்மன்
மண்ணுலகில் மகிழ்ந்துவாழ மறைந்துவிட்டாள்!
விண்ணுலகில் உனை அணைத்தாள வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆத்மசாந்திப் பிரார்த்தனையுடன்**

**சுதா திருக்குமார்**

**குடும்பத்தினர்** (அக்கா - கனடா)

(43326)(45.6.3)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்ந்தும் வெளியாள்களின் அத்துமீறிய நடவடிக்கைகள்

முல்லைத்தீவு. ஓக. 18

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமான வகையில் அட்டை பிடித்தலும் மீன் பிடியும் தொடர்ந்து இடம்பெறுவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமா சத் தலைவரானஅ.மரியராசா தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இறுதியாக இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரி வித்தார்.



கோப்புப்படம்

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ் வாறான செயல்களில் ஈடுபடுவதாகச் சுட்டிக் காட்டிய அவர் ஏற்கனவே இவை தொடர்பாக முறைப்பாடு தெரிவித்திருந்த போதிலும் அவை தொடர்வதாகத் தெரிவித்தார்.

தற்போதும் அட்டை பிடித்தல், சுருக்கு வலைத் தொழில், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித் தொழி லில் ஈடுபடல் என்பன இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

கடற்றொழில் திணைக்களம் முழு வீச்சில் செயற் பட்டு இவற்றைத் தவிர்க்க வேண்டு மெனவும் அவர் அங்கு கோரிக்கை விடுத்தார். (க-18)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஓக.18

நல்லூர் பிரதேச சபை யின் கொக்குவில் பொது நூல கத்தின் வாசகர் வட்ட கலந்து ரையாடல் இன்று மாலை 4 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது நூல கத்தின் செயற்பாடு கள் மற்றும் அபிவி ருத்தி தொடர்பில் கலந் துரையாடப் படவுள்ள தால் வாசகர்கள் மற் றும் அங்கத்தவர்க ளைக் கலந்து கொள் ளுமாறு நூலகத்தி னர் அறிவித்துள்ள னர். (வ-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சண்முகநாதன் பிரசாத்**

மண்ணில் 05 . 11 . 1993

விண்ணில் 27 . 07 . 2013

என் செல்வமே பிரசாத்
உன் பிரிவினை தாங்கிட முடியவில்லை
கள்ளம் கபடமற்ற உள்ளம் புன்னகை சிந்திய உதடு
பூ முகம் படைத்தவனே நீயின்றி நாம் இல்லை என
பாசமழை பொழிந்தாயே
என் அறியாமையா உன் விதியா இன்று உன் பிரிவை தந்தது ஏன்?
உன்னைப் பிரிந்து துடியாய்த் துடிக்கிறேன்
உன் முகம் பாராமல் உன் குரல் கேளாமல் தினமும் தவிக்கிறேன்.
இருபது வயதினை எட்டிப் பிடித்த போதும் எங்களுக்கு நீ சிறுபிள்ளையே!
சிறுவயதிலிருந்தே புன்னகை பூத்த முகம்
அதனால் நண்பர்கள் இட்ட பெயர் சிரிப்பு
சிரிப்பால் எல்லோருக்கும் பதில் சொல்வாய்
இறைவனும் உன் சிரிப்புக்கு ஆசைப்பட்டு
உன்னை அழைத்தாரோ என் செல்வமே!
நாள்களை எண்ணி மாதங்களை எண்ணி வருடம் ஒன்று ஆனதே
இன்னும் அன்பரிய கூட்டிச்செல்ல வரவில்லையே!!!
துடிக்கிறேன் தினமும் உன் நினைவில்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

பத்திரகாளி கோயிலடி,
பொலிகண்டி.

(49738) (4.3.6)

**வே.சோதிமலர்** (அன்ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**தம்பு செல்வராசா**

(தர்மகர்த்தா சபை உறுப்பினர்
திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார்
கோயில் - மீசாலை
உரிமையாளர் : கௌரி புடைவை நிலையம்
(சாவகச்சேரி சந்தை உட்புறம்))



அன்னை மடியில் 02.02.1934

ஆண்டவன் மடியில் 29.08.2013

*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்றாகிவிட்டது
நாங்கள் இவ்வுலகை விட்டுப்பிரியும் வரையும் - எம்
நெஞ்சங்களில் நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள்.*

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (18.08.2014) திங்கட்கிழமை மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் மதிய போசனம் வழங்கப்படும். அனைத்து உள்ளங்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(50893)(7.6.3)

**மீசாலை வடக்கு,
மீசாலை.**

**குடும்பத்தினர்.**


# நிலவில் நிழலாடியது மனிதன் அல்ல

### நாஸா விளக்கம்

நிலவில் ஒரு மனித உருவமும், அதன் நிழலும் தெரிவது போன்ற வெளியான காணொலிக்கு நாஸா விளக்கமளித்துள்ளது.


கடந்த சில தினங்களுக்கு முன்பு நிலவின் ஒரு மனிதனின் உருவமும், அதன் நிழலும் நிலவின் தரைப் பரப்பில் தெளிவாகத் தெரிந்தது போலவும் வெளியான காணொலியை 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்த்துள்ளனர்.

முதலில் இதை அமெரிக்க சர்வதேச விண்வெளி மையமான நாஸா வெளியிட்டதாகக் கூறப்பட்டாலும், அதை நாஸா உறுதிப்படுத்தவில்லை. தற்போது இதுகுறித்து விளக்கமளித்துள்ள நாஸா விஞ்ஞானிகள் கூறியதாவது:- இவ்வாறு நிலவில் தோன்றியது மண் துகள்கள் அல்லது நெகட்டிவில் இருந்த கீறல்களாக இருக்கும்.



சந்திரனுக்கு 1971 - 1972 ஆம் ஆண்டு அனுப்பட்ட அப்போலோ 15 அல்லது 17 விண்கலத்தின் மூலம் இந்த படம் எடுக்கப்பட்டு இருக்கலாம். ஏனெனில் அந்தக் காலங்களில் டிஜிற்றல் தொழில்நுட்பம் தற்போதுள்ள அளவுக்கு இல்லாமல் வளர்ச்சி பெறாத நிலையில் இருந்துள்ளது.

எனவே இதுபோன்ற தவறான விம்பங்கள் படத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர். (வ)



# நேபாளத்தில் கனமழை

## 85 பேர் உயிரிழப்பு

காத்மாண்டு, ஓக.18

நேபாளத்தில் கடந்த 3 நாள்களாக ஏற்பட்ட நிலச் சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 85 பேர் உயிரிழந்தனர். 46 பேர் காயம் அடைந்துள்ளனர். 113 பேரைக் காணவில்லை.

நேபாளத்தின் மேற்கே சுர்கெட் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் கன மழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. பல இடங்களில் கடும் நிலச் சரிவுகள் ஏற்பட்டன. சிசாபானி என்ற கிராமத்தில் மழை வெள்ளத்தில் அதிகமான மக்கள் அடித்துச் செல்லப்பட்டனர். பலரைக் காணவில்லை. நேற்றுக் காலை வரை மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். அந்தப்பகுதியில் தற்போது நேபாள இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பெஹ்ரி ஆற்றின் மேல் இருக்கும் தாட்டுபானி-காட்கரி மற்றும் தாட்டுபானி-பாபியா சவுர் மேம்பாலங்கள் மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. ஹரிஹரபூர் பகுதியில் மற்றொரு மேம்பாலமும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

கோர்கா மாவட்டத்தில் பாந்தீஸ்வரா கிராமத்தில் உள்ள அரசு பாடசாலையில் நேற்றுக் காலை மாணவர்களுக்கு கொரிய நாட்டைச் சேர்ந்தவர்கள் உணவு மற்றும்எழுதுபொருள்களைவழங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது வகுப்பறையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. பாடசாலையில் பணியாற்றிய 2 பெண்கள் மற்றும் ஒரு ஆண் இந்த விபத்தில் உயிரிழந்தனர். பாடசாலை மாணவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர் என்று நேபாள உள்துறைஅமைச்சகம் நேற்று செய்தி வெளியிட்டது. (வ)



# சீனாவில் புயல் மழை 27 பேர் சாவு

சீனாவின் தென் மேற்கு பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் 87 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

புஜியான், ஜியாங்க்சி, ஹுனான், குவாங்டாங், சிச்சுவான், கியுஸ் மற்றும் குவாங்ஸி ஜுவாங் மாகாணங்களில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் மழையால் 27 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காணாமற் போய் விட்டனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த கடுமையான புயல் மழையால் 2,100 வீடுகள் சேதம் அடைந்துள்ளன. 4,500 ஹெக்ரேயர் பயிர்கள் அழிந்தன. 292 மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# அல்கொய்தாவுக்கு எதிராக ஐ.நா. சபை நடவடிக்கை

ஈராக் மற்றும் சிரியாவில் தலைவிரித்தாடும் தீவிரவாதத்தை ஒழிக்க ஐக்கிய நாடுகள் சபை புதிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் தீவி ரவாத அமைப்புகளுக்கு ஆள்சேர்ப்பு மற்றும் நிதியுதவி அளிக்கும் ஆறு பேருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபை கடந்த வெள்ளிக்கிழமை ஒருமனதாக எடுத்துள்ள தீர்மானத்தில், அல்கொய்தா உள்ளிட்ட அனைத்து தீவிரவாத அமைப்புகளும் உடனடியாக ஆயுதங்களை ஒப்படைத்து அமைப்புக்களையும்கலைத்து விட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிரியாவிலும், ஈராக்கிலும் அல் கொய்தா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புக்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், பல்வேறு இடங்களுக்கு வெளியேற்றப்பட்டதையும் தொடர்ந்து பிரிட்டன் நாட்டால் இந்தத் தீர்மானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து சிரியா மற்றும் ஈராக்கில் அல் கொய்தாவுடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பான அல் நுஸ்ராவுக்கு ஆள்சேர்ப்பு மற்றும் நிதியுதவி செய்ததாக அப்துல் ரகுமான் முகமது சபீர் அல் தபிதி அல் ஜஹானி, ஹஜாஜ் பின் பஹத் அல் அஜ்மி, சையத் ஆரிப் மற்றும் அப்துல் மோசன் அப்துல்லா இப்ராகிம் அல் சரேக் ஆகிய நான்கு பேரின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

அவர்களோடு 'இஸ்லாமிக் ஸ்டேட்' குழுவுக்கு நிதியுதவி செய்த ஹமீத் ஹமத் ஹமீத் அல் அலி மற்றும் அபு முகமது அல் அத்னானி ஆகியோருக்கு உலகில் வேறு எங்கும் பயணிக்க முடியாதபடி தடை விதிக்கப்பட்டுள்ளது. எண்ணெய்க் கிணறுகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் தங்கள் அமைப்புக்குத் தேவையான நிதியை ஏற்படுத்திக் கொள்கின்றன என்று இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# நவாஸ் ஷெரீப் மீது கொலை வழக்கு

### நீதிமன்றம் உத்தரவு

இஸ்லாமபாத், ஓக.18

பாகிஸ்தான்பிரதமர்நவாஸ்ஷெரீப்மீதுகொலை வழக்கு பதிவு செய்ய லாகூர் செஷன்ஸ் நீதிமன்றம் நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தரவிட்டது. லாகூரின் மாதிரி நகரப் பகுதியில் கடந்த ஜூன் 17 ஆம் திகதி பாகிஸ் தான் அவாமி தெஹ்ரிக் தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயமடைந்தனர். இதுதொடர்பாக பிரதமர் நவாஸ் ஷெரீப், அவரது சகோதரரும் பஞ்சாப் முதல்வருமான ஷாபாஸ் உட்பட 21 பேர் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, பாகிஸ்தான் அவாமி தெஹ்ரிக் சார்பில் லாகூர் செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கை சனிக்கிழமை விசாரித்த நீதிமன்றம், பிரதமர் நவாஸ் ஷெரீப் உட்பட 21 பேர் மீதும் வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டது. (வ)

# ஸ்கொட்லாந்து தனிநாட்டாவது ஏற்கமுடியாது

### ஆஸி.பிரதமர் தெரிவிப்பு

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து ஸ்கொட்லாந்து மக்கள் தனியாகப் பிரிந்து செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஆஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து தனி நாடு கோரும் வாக்கெடுப்பு இன்று நடைபெற வுள்ளது.

வாக்கெடுப்பு பத்திரத்தில் சுதந்திர நாடாக மாறுவதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஆம், இல்லை என்ற வார்த்தைகள் மாத்திரமே காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆம் என்ற புள்ளியிடலில் புள்ளியிட வேண்டாம் என்று ஆஸ்திரேலிய பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ)

# ஈராக்கில் மதம் மாற மறுத்த ஆண்கள் 80பேர் படுகொலை

பக்தாத், ஓக.18

மதம் மாற மறுத்த சிறுபான்மையினரான யாஜிதி இனத்தைச் சேர்ந்த 80 பேர் ஐ.எஸ். தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஈராக்கின் வடக்குப் பகுதியில் யாஜிதி இனத்தினர் வசிக்கும் கோச்சோ என்ற கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் சிக்கியுள்ள இந்தக் கிராமத்துக்குள் செய்தியாளர்கள் செல்ல முடியாது.

அந்தக் கிராமத்தைப் பல நாள்களாக முற்றுகையிட்ட தீவிரவாதிகள், அங்கிருந்த யாஜிதி இனத்தவரை இஸ்லாம் மதத்துக்கு மாறுமாறு கூறி வந்தனர்.

கிராமத்தினர் மறுத்ததைத் தொடர்ந்து, 80 இற்கும் மேற்பட்ட ஆண்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாஜிதி இனத்தைச் சேர்ந்த மஹ்மா கலீல் என்கிற நாடாளுமன்ற உறுப்பினரும் குர்துப் படை செய்தித் தொடர்பாளரும் இந்தத் தகவலை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெரிவித்தனர்.

மஹ்மா கலீல் கூறுகையில், ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் ஈராக் அரசிடம் தொடர்ந்து மன்றாடி வருகிறோம். ஆனால் யாரும் அதைக் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியிலிருந்து தப்பிச் செல்பவர்களைக் காக்க அமெரிக்கா கூடுதல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்' என்றார்.

வெள்ளிக்கிழமை இரவு, கோச்சோ கிராமத்தில் இருந்த பெண்களையும் குழந்தைகளையும் அடுத்திருக்கும் தல் அஃபர் நகருக்கு அழைத்துச் சென்றனர். அந்த நகரம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து வருகிறது என்று குர்துப் படையினரின் செய்தித் தொடர்பாளர் ஹல் குர்து ஹிக்மத் கூறினார்.


இதுகுறித்து, யாஜிதி போராளி ஒருவர் குறிப்பிடுகையில், அந்த கிராமத்துக்குச் சென்றபோது, அதிகமான சடலங்கள் கிடந்தன. இரண்டு பேரை மட்டுமே உயிருடன் மீட்டோம் என்று தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி முதல் யாஜிதி பகுதிகளைத் தீவிரவாதிகள் முற்றுகையிட்டுள்ளனர். சிரியா எல்லைப் பகுதியை ஒட்டிய வடக்கு ஈராக் பகுதியில் உள்ள சிஞ்ஜார் நகரை இந்த மாத தொடக்கத்தில் தீவிரவாதிகள் கைப்பற்றினர். அப்போது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான யாஜிதிகள் உயிருக்கு அஞ்சி நகரை விட்டு வெளியேறினர். யாஜிதிக்கள் பழைமையான மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். இதனை சன்னி பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகள் எதிர்த்து வருகின்றனர். (வ)

## எல்லையில் பதற்றம்



ஜம்மு, ஒக.18
இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தி வருவதால் இந்திய எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது. ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஆர்.எஸ். புராவில் நேற்று அதிகாலை முதல் துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது. பாகிஸ்தான் வீரர்கள் மீது இந்திய வீரர்கள் பதில் தாக்குதல் தொடுத்து வருவதால் இரு எல்லைகளிலும் பதற்றம் நிலவி வருகிறது. ஒரு வாரத்தில் மட்டும் 4ஆவது முறையாக ஆர்.எஸ். புரா பகுதியில் பாகிஸ்தான் படை அத்துமீறியுள்ளது குறிப்பிடத்தக்கது. முன்னதாக நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் 2 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் படுகாயமடைந்தனர். (வ)



## உத்தரகாண்டில் வெள்ளம்

**உயிரிழந்தோர் 50 ஆக உயர்வு**

உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த 10 தினங்களாக கனமழை பெய்து வருகிறது. அதையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.
பௌரி கார்வால் என்ற பகுதியிலும் நிலச்சரிவுகள் ஏற்பட்டிருப்பதால், பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் தவித்து வருகின்றனர். அவர்களை ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்க உத்தரகாண்ட் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் கங்கை ஆற்றில் நீர் மட்டம் அபாய கட்டத்தை தாண்டிவிட்டதால் நேற்று ஹரிதுவாரில் புதிய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கிடையில் லட்சக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் பல்ராம்பூர், பாராபங்கி ஆகிய மாவட்டங்களில் மோசமான நிலையே தொடர்வதாகத் தெரிகிறது. (வ)

## திரிணாமுல் காங். தலைவர் சுட்டுக்கொலை

மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மர்ம நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். பஞ்ச்ரா கிராமத்தைச் சேர்ந்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அசோக் முகர்ஜி நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு வெளியில் சென்றபோது மர்ம நபர்கள் அவரை துப்பாக் கியால் சுட்டுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## தமிழிலும் பரப்புரை செய்யும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களால் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வலைத்தளங்களில் வெளியான பரப்புரைக் காணொலி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. ஈராக்கில் உள்ள சன்னி பிரிவினர் அங்குள்ள ஷியா பிரிவின மக்களை கொன்று குவிப்பதுடன், அந்த நாட்டின் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர்.
இந்த நிலையில் இணையத்தள பிரசாரம் மூலம் தமிழகத்தைச் சேர்ந்த 5 பேர் உள்பட இந்தியாவில் இருந்து 80 இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்து உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதற்கான இணையத்தள பிரசார காணொலி, ஆங்கிலம், ஹிந்தி, உருது, தமிழ் ஆகிய மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதாகவும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறித்து தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மத்தியில் பரப்புரை செய்யும் நோக்கில் இந்த காணொலி தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (வ)

## தாவூதின் சொத்துகளை பறிமுதல் செய்ய உத்தரவு

தாதா தாவூத் இப்ராகிம்மின் சொத்துக்களைப் பறி முதல் செய்ய டில்லி நீதிமன்றம் புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். சூதாட்டத்தில் நிழலுலக தாதா தாவூத் இப்ராகிம், அவரது கூட்டாளி சோட்டா ஷகீல் உள்ளிட்டோருக்கு தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. தலை மறைவாகியுள்ள அவர்களைப் பிடிக்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. மேலும், அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கு மாறும், அது தொடர்பான அறிக்கையை ஒகஸ்ட் 16 அன்று தாக்கல் செய்யு மாறும், கடந்த ஜூன் 10 ஆம்திகதி டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டது.
நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, பொலிஸாரின் நடவடிக்கையில் திருப்தி டையாத நீதிபதி பரத் பரஷார், அறிக்கை முழுவதும் மராத்தி மொழியில் உள்ளது. இந்தி யில் சில இருந்தாலும் அது முறையாக இல்லை. எனவே நீதிமன்ற அலுவல்மொழியில் முறையாக அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த வழக்கை மீண்டும் மீண்டும் ஒத்தி வைப்பதுஎன்பதுகவலை அளிக்கிறது என்றார். தாவூ தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது தொடர்பாக நீதிபதி புதிய உத்தரவையும் பிறப்பித்தார். (வ)

உ
சிவமயம்



இணுவில் பதியுறை திருவருள்மிகு
இணுவில் கந்தசுவாமி கோயில் மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு
அஷ்டோத்தர தசசஹஸ்ர கலச (10008) சங்காபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாகால விவரம்

**ஜயவருஷம் ஆவணி 2ஆம் நாள் (18.08.2014) திங்கட்கிழமை**
மாலை 7.00 மணிக்கு கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், அனுஜ்ஞை, வாஸ்துசாந்தி, கடஸ்தாபனம், கும்பம் யாகசாலா பிரவேசம், தீபாராதனை.

**ஜயவருஷம் ஆவணி 3ஆம் நாள் (19.08.2014) செவ்வாய்க்கிழமை**
காலை 9.00 மணிக்கு விநாயக வழிபாடு, புண்ணியாகவாசனம், யாகபூஜை, கலச சங்கபூஜை, படிக்கட்டளை அபிஷேகம், ஹோமம், தீபாராதனை, வேத தோத்திர திருமுறை பாராயணம்
மாலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாகவாசனம், யாகபூஜை, கலச சங்க பூஜை, விசேஷ திரவியஹோமம், தீபாராதனை, வேத தோத்திர திருமுறை பாராயணம்.

**ஜயவருஷம் ஆவணி 4ஆம் நாள் (20.08.2014) புதன்கிழமை**
அதிகாலை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்தாயிரத்தெட்டு (10008) கலச சங்குகள் அபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து விசேட தீபாராதனை, பூஜையும் நடைபெறும். மாலை சாயரட்சைப் பூஜையும் அதனைத் தொடர்ந்து சண்முகார்ச்சனையும் வசந்த மண்டபப் பூஜையும் முருகப்பெருமான் வீதிவலம் வருதலும் நடைபெறும்.

**பிரதமகுருக்கள்**
சிவஸ்ரீ இ.சிறிஸ்கந்தராஜக்குருக்கள் — இணுவில் கந்தசுவாமி கோயில்
சிவஸ்ரீ உ.அபராஜிதக்குருக்கள் — இணுவில் கந்தசுவாமி கோயில்

அடியார்கள் பூக்கள், மாலைகள், பால், தயிர், இளநீர், கற்பூரம் முதலிய பொருள்களைக் கொடுத்து உதவலாம்.


அனுசரணை : GISO CONSTRUCTION, INUVIL.

தர்மகர்த்தா சபை

(3964)(7.6.3)

# பொதுபல சேனாவின் சார்பில் தேர்தலில் பொது வேட்பாளர்

## அந்தக் கட்சியின் செயலாளர் கூறுகின்றார்



கொழும்பு, ஓக.18
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுபல சேனா அமைப்பின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தாம் களமிறக்க உள்ளோம் என்று அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பெளத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த யோசனை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அறிவிக்கப்படவுள்ளது என்றும், அவ்வாறு இந்த யோசனைக்கு அவர்கள் மறுப்பு தெரிவிப்பார்களாயின் தாம் தனியாக வேட்பாளரை களமிறக்க உள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது.

''ஜனாதிபதி தேர்தலில் பிரதான தேசிய கட்சிகள் சிங்கள மக்களுக்கு ஆதரவான வேட்பாளர் ஒருவரை நிறுத்தாவிட்டால் நாம் அவ்வாறான வேட்பாளரை நிறுத்த வேண்டி வரும். சிங்கள பெளத்த கொள்கைகளை அடிப்படையாக வைத்து ஆவணமொன்றை தயாரித்து அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும், எதிர்க்கட்சி தலைவரிடமும் கையளிக்க உள்ளோம். அதனை அவர்கள் நிராகாரிக்கும் பட்சத்தில் எமது அமைப்பு வேறொரு வேட்பாளரை நிறுத்தும்''- என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# ரணில் போட்டியிட்டால் மஹிந்த வெல்லக்கூடும்

## ஜே.வி.பி. கூறுகின்றது



கொழும்பு, ஓக.18
பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டால் மஹிந்த தோற்கடிக்கப்படுவார் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அதற்கான வாய்ப்புகள் அற்றுப்போகும். அப்படி நடக்குமாயின் ஜே.வி.பியும் வேட்பாளர் ஒருவுரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால் காந்த.

வேட்பாளராக நிறுத்தப்படுபவர் ஜே.வி.பியின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. வெளியே இருந்து எவராவது வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ஒருவர் நிறுத்தப்பட்டால், ஜனாதிபதி மஹிந்த் ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை மக்கள் மத்தியில் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்தால், மக்களின் அந்த நம்பிக்கையில் பாதிப்பு ஏற்படும்.

ஜே.வி.பி. வேட்பாளரை நிறுத்தினால், எதிர்க்கட்சிகளின் வாக்குகள் இரண்டாக பிரியும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பான பரப்புரையில் ஈடுபட்டுள்ள பின்னணியில் ஜே.வி.பிக்கு மாற்றுவழி கிடையாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நகை திருடியோருக்கு வலைவிரிப்பு

கொழும்பு, ஓக.18
பாணந்துறை பிரதேசத்திலுள்ள நகைக்கடையொன்றில் தங்க நகைகளை கொள்வனவு செய்யும்தோரணையில்சென்று ஒரு லட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான வளையல்கள் இரண்டைத் திருடிச்சென்ற இரண்டு பெண்கள் உட்பட மூவரை தேடி வலைவிரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர் பொலிஸார்.

குறித்த நகைக்கடையில் இருந்த சீ.சீ.டிவி கமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் இந்த திருட்டுச் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தங்க நகை கொள்வனவு செய்யும் பாவனையில்வந்த பெண், பின்னால் இருந்த பெண்ணிடம் தங்க வளையல்கள் இரண்டை திருடி கொடுத்துள்ள காட்சிகள் அதில் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இரத்மலானையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் சாவு

கொழும்பு, ஓக.18
இரத்மலானை தெலவல வீதி பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் பிற்பகல் 1.15 அளவில் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், குறித்த பிரதேசத்தில் 25 வயதான இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் தெலவல வீதி பகுதியைச் சேர்ந்த யோமான் யசந்த என்ற நபரே கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, ஓக.18
அநுராதபுரம்- பாதெனிய வீதியில் கென்னபுகுனு எனுமிடத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இலங்கை வங்கி சேவையாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் வங்கி நிறைவேற்று அதிகாரி பயணித்த ஜீப் வண்டி, டிராக்டருடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் டிராக்டரில் பயணித்த இளைஞனே உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர்கள் வங்கி முக்கியஸ்தர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)



கொலன்னாவை தேர்தல் தொகுதியைச்சேர்ந்த பல கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கும் நிகழ்வு எரிசக்தி மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தலைமையில் இடம்பெற்றது. கொலன்னாவை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த அருப்போருவை ,பஹலவலகட ,திக்வெல ,கட்டுவெதமெத ஆகிய கிராமங்களுக்கே இவ்வாறு மின் விநியோகம் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் இது வரைகாலமும் மின்சார வசதிகளின்றி விளக்கு வெளிச்சத்தில் வாழ்ந்த அந்தப் பகுதிகளைச்சேர்ந்த 250 வீடுகளுக்கும் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்துக்கு 400 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் காஞ்சன ஜயரத்ன, கொலன்னாவை பிரதேச சபை தலைவர் தயா பத்திரன உட்பட பல அரசியல் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பரீட்சை மண்டபம் செல்லாது பரீட்சை எழுதிய மூவர்



கோப்புப்படம்

கொழும்பு, ஓக.18
நாடளாவிய ரீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில், பரீட்சை மண்டபத்திற்கு செல்லாமல் பரீட்சார்த்திகள் மூவர் பரீட்சைக்கு தோற்றினர் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தம்புள்ளை பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவியொருவர் வைத்தியசாலையிலும், வெள்ளத்தினால் பரீட்சை மண்டபத்துக்கு செல்லமுடியாதிருந்த மாணவர் இருவர் சன சமூக நிலையத்திலும் பரீட்சைக்கு தோற்றினர்.

விபத்தில்காயமடைந்த மாணவி பரீட்சை எழுதுவதற்கு வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பன தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

இதேவேளை,போபத்தலாவை தெரங்கலையில் ஏற்பட்ட வெள்ளத்தால் இரண்டு மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்துக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது என்று பரீட்சை திணைக்களத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதனையடுத்து பிரதேச செயலக அதிகாரிகள் மூவர், டிங்கி வள்ளத்தின் மூலம் தெரங்கலைக்கு சென்று அங்குள்ள சனசமூகநிலையத்தில் வைத்து அவ்விரு பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை நடத்தியுள்ளனர். (ற)

# கத்தோலிக்க மக்களுடைய வாக்குகளை அரசு இழக்கக்கூடும்

## எச்சரிக்கின்றார் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன



கொழும்பு, ஓக.18
அரசு கத்தோலிக்க மக்களின் வாக்குகளை இழக்கக் கூடும். பொதுபல சேனா போன்ற அடிப்படைவாத அமைப்புகளின் செயல்களால் அரசுக்கு சிறுபான்மை இன மக்களின் வாக்கு வங்கியில் பாரதூரமான சரிவு ஏற்பட்டுள்ளது- இவ்வாறு தெரிவித்துள்ளார் மீன்பிடி நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

''இந்த நிலைமை தொடர்ந்தால், கத்தோலிக்க மக்களின் வாக்குகளையும் இழக்க நேரிடுவதுடன், ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பெளத்த வாக்குகளை மட்டுமே பெற்று தேர்தலில் வெற்றிபெற வேண்டிய நிலைமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கட்டாயம் ஏற்படும்.

அரசின் சிறுபான்மை இன வாக்கு வங்கியானது முற்றாகச் சரிந்துள்ளது. போருக்கு பின்னர் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமற்போனது. பொதுபல சேனா முஸ்லிம் வாக்குகளையும் அரசுக்கு கிடைக்காமல் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

போர் காரணமாக தமிழ் மக்களின் வாக்குகளை அரசு இழந்து விட்டது. அண்மைய செயற்பாடுகளால், முஸ்லிம்களின் வாக்குகளையும் அரசு இழந்துள்ளது. சிங்களவர்களின் வாக்குகளையும் இழக்கும் நிலைமைக்கு வழிவகுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அமைச்சரவை கூட்டம் ஒன்றில் தெரிவித்தார், ஒரு அமைச்சரிடம் கூறினார்.

நிலைமை இப்படியே தொடருமானால், கத்தோலிக்க வாக்குகளையும் அரசு இழந்து, வெறும் பெளத்த சிங்கள வாக்குகளை மாத்திரம் நம்பிக்கையிருக்க வேண்டும்.''- என்று தெரிவித்துள்ளார். (ற)

Shakthi சக்தி FM
தமிழ் பேசும் மக்களின் சக்தி

# சக்தி FM யாழ் நேரலை

the capital maharaja organisation limited
Since 1930

## யாழ் மண்ணிலிருந்து உலகெங்கும்
## தமிழ் பேசும் மக்களின் சக்தி




யாழ் நல்லூரில்

# சக்தி வளாகம்

ஆகஸ்ட்
**18 - 24**

உலகின் மிகப்பிரம்மாண்டமான
வானொலிக் கலையகம்
உங்கள் அன்பு அறிவிப்பாளர்கள்
ஏராளமான போட்டிகள்
அட்டகாசமான பரிசுகள்
தினமும் கலை நிகழ்ச்சிகள்

**அனைவரையும்**
**அன்போடு அழைக்கின்றோம்**

உத்தியோகபூர்வ பத்திரிகை

Shakthi சக்தி FM
Shakthi சக்தி TV
தமிழ் பேசும் மக்களின் சக்தி
NEWS 1st
உதயன்

நல்லூரான் சக்தி நாடெங்கும் பரவட்டும்

**104.1 / 103.9 FM**
**www.shakthifm.com**

# பொன்னாலை
# ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
# தேர்ச்சிறப்பு மலர் - 18.08.2014




## தலமும் இருப்பிடமும்

தட்சிணகைலாச மகாஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வடபாகத்தில் வீணாகான புரமென்று சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீர்க் கடலும் சமுத்திரமும் தெற்கு, மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத்துக்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக்கரை மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலயத்துக்குமுன் (கிழக்கு மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கிறது.

**தலப்பெயர்கள்**

இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

**சுவர்ணாலயபுரி**

இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றிய படியாலும் இப்பெயர் பெற்றது.

**சதுரங்கம்**

ஆலய உற்பத்திக் காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ் விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்கு பிரீதியாக அமைந்த தலப் பெயர் பாரதநாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள்ளன.

**பொன்னாலயம்**

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம் பொன்னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

**கோயிலமைப்பு**

இந்த ஆலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்குகின்றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஏழு பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது.

இப்போது தேர் ஓடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன்னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாயமைந்தவரும் வரந்தருபவருமான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளுகின்றார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான், வட மேற்கே சனீஸ்வரன் கோயிலும், வடக்கே தீர்த்தக் கிணறும் வன்னியும் அடுத்தாற்போல நவக்கிரக கோயிலும் வசந்த மண்டபமும், ஈசான திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

**தலப்பெருமை**

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக் கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர்களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின. சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு என்ற நூலில் இத்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது.★

★★★★★★★★★★ பிரசுர அனுசரணையாளர்கள் ★★★★★★★★★★

கணேசா
ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்
மின்சார உபகரணங்கள் ஏக விநியோகஸ்தர்
காரைநகர் றோட், மூளாய்.

நகுலேஸ் ஹாட்வெயார்
கட்டடப் பொருள்கள் (மண்,கல் உட்பட) பெயின்ற் வகைகள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
தெல்லிப்பழை வீதி, பண்டத்தரிப்பு.
தொடர்பு: 077 717 4445

கரன் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

ஸ்ரீமுருகன் களஞ்சியம்
L.P GAS விற்பனையாளர்
(புதினப் பத்திரிகை முகவர்)
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

ஸ்ரீமுருகன் புத்தகசாலை
நியூ அக்றோ சென்ரர்
சகலவிதமான புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், விவசாய உரம், கிருமி நாசினிகள் உபகரணங்கள் விற்பனைநிலையம்.
சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு.

சிவாஸ் மில்
பிள்ளையார் கோயிலடி,
காரைநகர் வீதி, மூளாய்.

சிவம் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
வழக்கம்பரை, சுழிபுரம்.
021 225 0160, 077 721 7304

குகன்ஸ்
Reloads, Photocopy, Oils, Sweep Ticket.
(Opposite in Vaddu Hindu College)
Vaddukoddai.
Dialog, Airtel, Telecom, Hitch, Mobitel.

செல்வா ஹாட்வெயார்
அன் எலக்ரிக்கல்ஸ்
எல்லாவிதமான எலக்ரிக்கல் பொருள்களும் விற்கப்படும்.
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
021 491 0465, 077 707 2162


சத்தியா ஸ்ரோர்ஸ்
அன் பான்சி கவுஸ்
மளிகைப் பொருள்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அராலி வடக்கு, செட்டியார்மடம்.

ஸ்ரீ வரதராஜா
வெதுப்பகம்
பிஸ்கற் வகைகள் சில்லறையர்கவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சுழிபுரம்.

கிருஷ்ணா
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொல்புரம், சுழிபுரம்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
கட்டடப் பொருள்கள், (மண்,கல் சிமெந்து உட்பட)
பல சரக்குப் பொருள்கள், கோயில் அபிஷேகப் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வட்டுக்கோட்டை. 021 225 0787


ஈஸ்வரா நெற்கபே
ஈஸ்வரா பல்பொருள்
வாணிபம்
காரைநகர் வீதி, சுழிபுரம்.

கணேஸ் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைக்கு பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

(C/15149)(10.6.3)

# மாந்தை கிழக்குக்கு குடிதண்ணீர் வழங்க போதிய பவுஸர், நீர்த் தாங்கிகள் இல்லை

## கைவிரிக்கிறார் பிரதேச சபைத் தவிசாளர்

முல்லைத்தீவு, ஓக.18
மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட 8 கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு போதியளவு பவுஸர், நீர்த்தாங்கிகள் இன்மையால் பொதுமக்களுக்கு நிறைவான சேவையைச் செய்ய முடியாதுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் பிரிவில் 15 கிராம சேவகர் பிரிவுகள் உள்ள போதும் 8 கிராம சேவகர் பிரிவுகளில் குடிதண்ணீர் வசதியின்றி மக்கள் அல்லலுறும் நிலை காணப்படுகின்றது.

வறட்சி காரணமாக பொன்னகர், பூவரசங்குளம், விநாயகபுரம், நெட்டாங்கண்டல், கரும்புள்ளியான், கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம், ஒட்டறுத்தகுளம், பாண்டியன்குளம் ஆகிய கிராமங்களில் 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

> நீர் வழங்குவதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார். இருந்த போதும் நீர் நிரப்புவதற்கான, பவுஸர்களோ, நீர்த்தாங்கிகளோ எம்மிடம் இல்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட போது அவர் நீர் வழங்குவதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார். இருந்த போதும் நீர் நிரப்புவதற்கான, பவுஸர்களோ, நீர்த்தாங்கிகளோ எம்மிடம் இல்லை.

தற்போது எம்மிடம் 3 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளவு கொண்ட இரண்டு சிறிய பவுஸர் வாகனங்களே உள்ளன.

இதனை வைத்து வறட்சி ஏற்பட்டுள்ள கிராம மக்களுக்கு நீர் வழங்க முடியாதுள்ளது. எனவே எமது சேவையை நிறைவாகச் செய்ய அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், புலம்பெயர் உறவுகளும் எமக்குத் தேவையான பவுஸர் மற்றும் நீர்த்தாங்கிகளை அன்பளிப்புச் செய்வதற்கு முன்வர வேண்டும்- என்றார். (த-422)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு கிளிநொச்சியில் 7,786 பேருக்கு

கிளிநொச்சி, ஓக.18
கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 7ஆயிரத்து 786 பேருக்கு மாதாந்த உதவித்தொகையும் 157 பேருக்கு புற்று நோய்க்கான கொடுப்பனவும் மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 426 பேருக்கும், பச்சிலைப்பள்ளியில் 765 பேருக்கும், பூநகரியில் ஆயிரத்து 612 பேருக்கும், கண்டாவளையில் ஆயிரத்து 983 பேருக்கும் என 7 ஆயிரத்து 786 பேருக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கரைச்சியில் 92 பேருக்கும், பச்சிலைப்பள்ளியில் 17 பேருக்கும், பூநகரியில் 16 பேருக்கும், கண்டாவளையில் 36 பேருக்கும் என 157 பேருக்கு புற்று நோய்க்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இவற்றை விட மாவட்டத்தில் 17 பேருக்குக் காச நோய்க்கான கொடுப்பனவும், 9 பேருக்குச் சிறுநீரகநோய் கொடுப்பனவும், 2 பேருக்குத் தொழு நோய்க்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருவதாகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-55)

## யானைகள் தொல்லையால் அவலப்படுகின்றனர் மக்கள்

துணுக்காய், ஓக.18
துணுக்காய், தேறாங்கண்டல், ஐயன்கன்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.


கோப்புப்படம்

இதனால் அச்சத்துடன் இரவைக் கழிக்க வேண்டிய அவலநிலை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய், ஐயன்கன்குளம் ஆகிய பகுதிகளில் தற்போது காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. மாலை 6 மணி ஆனவுடன் காட்டு யானைகள் ஊர் மனைக்குள் புகுந்து பெரும் அட்டகாசம் செய்து வருகின்றன.

கடந்த காலங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

தற்போது நிலவுகின்ற வறட்சியினால் தண்ணீருக்கான தட்டுப்பாடை அடுத்து தண்ணீர் தேடிக் காட்டுயானைகள் ஊர் மனைக்குள் நுழைகின்றன.

இதனால் பெரும் அச்சத்துடன் வாழும் நிலை தோன்றியுள்ளது என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளதுடன், இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளனர். (த-55)



மன்னார் மாவட்டத்தில் வறட்சியான காலத்தில் நீர் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு நெல் வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக புதுக்கமம் கிராமத்தில் உலக தரிசனம் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் விவசாய விரிவாக்க திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடனும் 40 ஏக்கர் விஸ்தீரணத்தில் பாசிப்பயறு, நிலக்கடலை, சோளம், போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டன.
இந்தச் செய்கை வெற்றியளித்துள்ளதால் நேற்று முன்தினம் சனிக்கிழமை புதுக்கமம் கிராமத்தில் வயல் விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக வட மாகாண விவசாயப் பணிப்பாளா எஸ்.சிவகுமார் கலந்துகொண்டார். (வ)

## சிறுபோக நெற்செய்கை பாரம்பரிய அறுவடை


பாரம்பரிய முறைப்படி சிறுபோக அறுவடை

கிளிநொச்சி, ஓக.18
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

குறிப்பிட்ட சில விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி கையால் அறுவடை செய்து வருகின்றமையைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் விதை நெல் உற்பத்திக்காக நெற்செய்கை மேற்கொண்ட சில விவசாயிகள் தற்போது நெல் அறுவடை இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் கையினால் அறுவடை செய்து வருகின்றனர்.

பல குடும்பங்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் இவ்வாறான அறுவடைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனப் பலரும் கூறியுள்ளனர். (த-55)

## காணிப் பிணக்குகள் தொடர்பில் புதுக்குடியிருப்பில் விவரம் திரட்டல்

### நடமாடும் சேவையில் தீர்வு காண வசதியாக

கரணவாய், ஓக.18
புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காணி தொடர்பான பிரச்சினைகள் எதிர்நோக்கும் குடும்பங்களை அது தொடர்பான விவரங்களை அந்தந்த கிராம சேவகர் மூலம் பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் ஐ.பிரதாபன் கேட்டுள்ளார்.

காணி ஆணையாளர் செயலகத்தின் அனுசரணையுடன் காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் நடத்தப்படவுள்ளது. இதில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், வெலிஓயா மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இதில் காணி ஆணையாளர் நாயகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே இந்த நடமாடும் சேவையில் புதுக்குடி யிருப்பு பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வு காணும் வகையில் மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இயங்கும் காணித் திணைக்களத்திடம் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (த-108)

## மண்டபம் இல்லை; மர நிழலின் கீழ் பொது நிகழ்வுகள்

முல்லைத்தீவு, ஓக.18
முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் பொது மண்டபம் இல்லாத காரணத்தினால் மீளக்குடியமர்ந்த மக்கள் பொது நிகழ்வுகளை மர நிழலின் கீழ் நடத்தும் அவலம் நீடிக்கின்றது.

சுமார் 325 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ளன. இந்தக் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்றை அமைக்கவென கால் ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தக் காணியில் கிணறும் காணப்படுகிறது.

இந்தக் காணி யில் பொது மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-18)

## கிராம சேவையாளரை நிரந்தரமாக நியமிக்குக

### ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

மாங்குளம், ஓக.18
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒட்டுசுட்டான் கிராமத்துக்கு நிரந்தர கிராம சேவையாளரை நியமிக்குமாறு அந்தப் பகுதி கிராம மக்களும், அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 20 கிராம சேவகர் பிரிவு காணப்படுகின்றன. இதில் 5, 600 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தப் பகுதியில் கிராமங்கள் தோறும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் சமூக நிறுவனங்களால் அரைக்கும் ஆலை, எண்ணெய் ஊற்றும் ஆலை, மணல் விற்பனை, சுழற்சி முறையில் கடன் வழங்கல், ஒப்பந்த சேவைகள் மற்றும் கிணறு அமைத்தல், மலசல கூடம் அமைத்தல் என உள்ளூர் அபிவிருத்தி வேலைகள் என நடைபெற்று வருகின்றன.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் இந்த வேலைத் திட்டத்துக்கான ஆய்வு செய்யப்பட்டு பிரதேச செயலாளருடாக மாவட்ட அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு கிராம சேவகருக்கு உள்ளது.

ஆனால் ஒட்டுசுட்டான் கிராமத்துக்குப் புதுக்குடியிருப்பு கிராம சேவகரே பதில் கடமையில் ஈடுபடுவதால் ஒட்டு சுட்டான் கிராமத்துக்கான அபிவிருத்தி வேலைகள் சரிவர நிறைவாகச் செய்ய முடியாதுள்ளது. (த-422)

## வடமராட்சி கிழக்கில் 3 கிராமங்களுக்கு மின் விநியோகம் இன்று ஆரம்பம்

வடமராட்சி, ஓக.18

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மேலும் மூன்று கிராமங்களுக்கு இன்று மின்சார விநியோகம் கிடைக்கவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு போர் கறுப்பு கிராமத்திலும் பிற்பகல் 3 மணிக்கு செம்பியன்பற்று மானிய வளைக் கிராமத்திலும், மாலை 4 மணிக்கு நாகர்கோவில் கிழக்கு கிராமத்திலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின்விநியோகத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

இந்தக் கிராமங்களுக்கு மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படுவதைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் 90 வீதமான மக்களுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது.



கோப்புப்படம்

இந்த விநியோகத்தைத் தொடர்ந்து எஞ்சியுள்ள குடாரப்பு சுண்டிக்குளம் ஆகிய கிராமங்களில் குடாரப்பு கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சுண்டிக்குளம் கிராமத்தில் இன்னமும் மக்கள் மீள்குடியேற்றம் இன்மையால் அந்தக் கிராமத்துக்கு மின்சார விநியோகம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படவில்லை. (ஒ-173)

# வாகன புகைப் பரிசோதனை 'மெக்கானிக்' வந்தால் 'பாஸ்'

## இல்லையேல் திரும்பத் திரும்ப 'பெயில்' தான்

யாழ்ப்பாணம், ஓக.18

வாகனப் புகைப் பரிசோதனைக்கு வாகனத்துடன் திருத்துநரையும் அழைத்து வர வேண்டிய நிலை அவற்றின் உரிமையாளர்களுக்கு ஏற்படுகிறது.

புகைப் பரிசோதனைக்கு கொண்டு வரப்படும் வாகனங்களைப் பரிசோதிப்பவர் திடீரென அக்ஸிலேட்டரை உயர்வாக அழுத்தும்போது அதிகளவு எரிபொருள் வெளியேறுவதுடன் வாயு குறைவாகச் செல்வதால் கரும்புகை வெளியேறுகிறது.

இதனால் புகைப் பரிசோதனை 'பெயில்' என அறிக்கையிடுவதால் திரும்பத் திரும்பத் திருத்தம் செய்து கொண்டு வந்தாலும் இதே போன்றே அறிக்கை வழங்கப்படுவதாக வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



கோப்புப்படம்

மூன்று தடவைகள் 'பெயில்' அறிக்கை பெற்ற ஒருவர் வாகனத் திருத்துநரை அழைத்து வந்து வாகனத்தைப் பரிசோதனைக்குக் கொடுத்தபோது அங்கு வாகன அக்ஸிலேட்டரை மெதுவாக இயக்கிவிட்டு 'பாஸ்' என அறிக்கை வழங்கப்பட்டது.

இந்த விடயம் தீ போலப் பரவியதில் தற்போது புகைப் பரிசோதனைக்கு வாகனத்தைக் கொண்டு வருவோர் திருத்துநரையும் அழைத்து வருகின்றனர்.

திருத்துநர் புகைப் பரிசோதனை நிலையத்துக்கு வருவதற்கு கட்டணமாக மோட்டார் சைக்கிளுக்கு 500 ரூபாவும், கார் ஒன்றுக்கு ஆயிரத்து 200 ரூபாவும், வான் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அறவிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் வாகனங்கள் கூட புகைப்பரிசோதனைக்குக் கொண்டு செல்கையில் இவ்வாறான கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நடத்தப்படும் வாகன புகைப் பரிசோதனை நிலையங்களை மாகாண சுற்றாடல் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்த வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த-9)

## 4,000 ஜூஸ் பைக்கற்றுகள் விளானில் கைப்பற்றி அழிப்பு

### சுகாதார விதிகளுக்கு முரணாக உற்பத்தி செய்யப்பட்டதால்

சண்டிலிப்பாய், ஓக.18

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 4,000 ஜூஸ் பைக்கற்றுக்களை கைப்பற்றி அழித்த சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஜூஸ் உற்பத்தி செய்வதற்கு தற்காலிக தடையை விதித்துள்ளார்.

உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ். வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வைத்திய அதிகாரி றஜீவ் தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் பி.சிவரூபன், கே.ஜெகானந்தன் ஆகியோர் விளானிலுள்ள ஜூஸ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை முற்றுகையிட்டு சோதனை செய்தபோது சுகாதார விதிமுறைகளுக்கு மாறாகத் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 4 ஆயிரம் ஜூஸ் பைக்கற்றுக்களைக் கைப்பற்றி அழித்ததுடன் மேற்படி தொழிற்சாலையை சுகாதார விதிமுறைகளுக்கமைவாக மறுசீரமைக்கும் வரை ஜூஸ் உற்பத்தி செய்வதற்கு தடை விதித்துள்ளனர்.

இதேவேளை- கடந்த காலங்களில் தொழிற்சாலை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு நிபந்தனையின் அடிப்படையில் தற்காலிகமாக இயங்குவதற்கு அதிகாரிகளினால் அனுமதி வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-115)



கொட்டடி மீன் சந்தைக்கு அருகில் உள்ள கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் கொள்கலன் நிரம்பி வழிகின்றது. இதனால் அதற்குள் போடப்பட்ட பொலித்தீன்கள் வெளியே சிதறிக் காணப்படுகின்றன. (த-17)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய நான்கு பேர் மறியலில்

தென்மராட்சி, ஓக.18

அனுமதிப் பத்திரமின்றி தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் லொறியில் மணல் ஏற்றிய வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த நான்கு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 14ஆம் திகதி பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து கெற்பேலிப் பகுதிக்குச் சென்ற கொடிகாமம் பொலிஸார் அங்கு லொறியில் மணல் ஏற்றிய நால்வரைக் கைது செய்தனர்.

இவர்களை விசாரித்த போது மணல் ஏற்றுவதற்குரிய அனுமதிப் பத்திரம் இல்லாததால் இந்த நால்வருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் நால்வரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## வறுமையான குடும்பங்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள்

கரணவாய், ஓக.18

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள வசதி குறைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, செயற்கை அவயவங்கள் பொருத்துதல், காது கேட்கும் கருவி வழங்குதல் மற்றும் ஊன்றுகோல்கள் வழங்குதல் போன்ற சேவைகள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் வழங்கப்படவுள்ளன.

இவற்றைப் பெறுவதற்குத் தகுதி உடையோர் தகுந்த மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்துடன் கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.

இதேவேளை - வீரகத்திப்பிள்ளையார் கோவிலடி, இமையாணன் மேற்கைச் சேர்ந்த சிவஞானம் அன்னம்மா என்பவருக்கு வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தால் சக்கர நாற்காலி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதனை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (த-108)

## பழுதடைந்த கடற்பாதைக்கு வருகிறது புதிய இயந்திரம்

யாழ்ப்பாணம், ஓக.18

குறிகட்டுவான் துறைக்கும் - நயினாதீவு இறங்குதுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுத் தற்போது ஓடமுடியாத நிலையில் உள்ள கடற்பாதைக்குப் புதிய இயந்திரம் இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

கடற்பாதையின் இயந்திரம் பழுதடைந்ததால் பாதையின் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை இங்கே திருத்த முடியாத நிலை உள்ளது.

இதனை அடுத்து புதிதாக வேறொரு இயந்திரத்தை இந்த வாரத்தில் எடுத்து வந்து பொருத்திப் பாதைச் சேவையை ஆரம்பிப்பதற்குத் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராக கருணலிங்கம்

அச்சுவேலி, ஓக.18

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக வீரகத்தி கருணலிங்கம் பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கை கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த இவர் 2001 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராக இணைந்து அழகியல் துறைக்கு பொறுப்பாக இருந்து வந்துள்ளார். கடந்த சில வருடங்களாக கலாசாலையின் உப அதிபராகக் கடமையாற்றி வந்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்த வே.கா.கணபதிப்பிள்ளை சேவையில் இருந்து ஓய்வுபெறுவதால் வி.கருணலிங்கம் அதிபராகக் கடமையேற்றுள்ளார். ஆசிரிய கலாசாலையின் உப அதிபராக ச.லலீசன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-11)

## மருந்து விசிறிய பழங்களை விற்கும் கடைகளுக்கு ஆப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

மருந்துகள் விசிறப்பட்ட பழவகைகளை நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன்,



கோப்புப்படம்

வியாபார அனுமதியும் ரத்துச் செய்யப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இது தொடர்பாகக் கலந்துரையாடி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

விற்பனை செய்யப்படும் பழங்கள் அனைத்தும் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் எனவும் மருந்து விசிறப்பட்ட பாவனைக்குதவாத பழங்கள் காணப்படுமிடத்து சம்பந்தப்பட்ட வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தப்புவதும் தப்புவிப்பதும்

குற்றம் புரிபவர்களை தப்ப வைப்பது என்பது ஒரு கலையாக, அல்லது ஒரு கலாசாரமாக இந்த நாட்டில் இப்போது நிலைபெற்று வருகிறது. அதைவிட குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களை விட்டுவிட்டு குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளிகளாகப் பரப்புரை செய்வதும் இப்போது நிலைபெறுவதாகத் தெரிகிறது.

சமீப காலத்தில் அமைச்சர் ஒருவரின் புத்திரரால் தாக்குதலுக்குள்ளாகி காயமுற்றிருந்ததாகக் கூறப்பட்ட அரச அதிகாரி ஒருவர் தன்னைத்தானே தாக்கிக் கொண்டார் என்று பாதுகாப்புத் தரப்பினரால் அறிவிக்கப் பட்டு பின்னர் அந்த பாதிக்கப்பட்ட அதிகாரியின் பிரச் சினைக்கு என்ன நேர்ந்ததென்றே தெரியாமல் போய்விட்டது. கடந்த ஆண்டு உதயன் பணிமனையில் இரவு நேரத்தில் நுழைந்த முகத்தை மூடி தலைக்கவசம் அணிந்த ஆயுததாரிகள் பணிமனையில் பணியில் இருந்த அலுவலர்களை துப்பாக்கியால் வான் நோக்கி சுட்டு பயமுறுத்தி துரத்திவிட்டு இயங்கிக் கொண்டு இருந்த பிரதான இயந்திரத்தின் மீதும் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தார்கள். அந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்திருந்த உயர் இராணுவ அதிகாரி ஒருவர் அது உள் வீட்டு விவகாரமாக இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார். அதாவது அவர்கள் பாஷையில் உதயன் தன்னைத்தானே தாக்கிக் கொண்டது என்பதாகும். அந்தச் சம்பவம் பற்றிய விசாரணை முடிவுகள் இதுவரைக்கும் வெளிவந்ததாக இல்லை. இப்பொழுது வித்தியாசமான சம்பவம் பற்றிய செய்தி ஹொரணை பகுதியில் இருந்து வந்துள்ளது. பரீட்சை மண்டபத்தில் பொது தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த போது அவரை சாரைப்பாம்பொன்று தீண்டியுள்ளது. பாம்பு தீண்டிய இடத்தில் கட்டுப்போட்டுத் தொடர்ந்து பரீட்சை எழுதுவித்துள்ள அதிகாரிகள் பாம்பு கடித்த இடம் பரீட்சை மண்டபமில்லை வெளியிடத்தில் என்று அவரிடம் எழுதி வாங்குவதற்கு எத்தனிக்கிறார்கள் என்று அந்தப் பரீட்சார்த்தியின் தந்தையான டபிள்யூ விமலசேன என்பவர் கூறியிருக்கிறார்.


அதிகாரிகள் தாம் தப்பிக் கொள்வதற்கும் தமக்கு வேண்டியவர்களை தப்புவித்துப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இவ்வாறான முயற்சிகளில் இறங்குகிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. இதே பாணியில்தான் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்து தமிழ் மாணவன் சந்திரகுமார் சுதர்சனுக்கு நடந்திருக்கிறது என்று இப்பொழுது அனேகர் கருதத் தொடங்கியுள்ளார்கள். நிதர்சன் தன்னைத் தானே தாக்கி காயப்படுத்திக் கொண்டார் என்று பொலிஸ் தரப்பு பேச்சாளர் அறிக்கை விட்டிருந்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான தொனியில் கண்டித்திருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் கழகங்களும் இதேவிதமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றன. சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் எதுவித பிரச்சினையுமின்றி அமைதியும் நேசப் பாங்கும் நிலவுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

சுதர்சன் மருத்துவமனையில் இருந்தபோது அல்லது அங்கிருந்து விடுவிக்கப்பட்டபோது இவ்வாறு தன்னைத் தானே தாக்கிக்கொண்டதாக கூறியதாக தெரியவில்லை. கடுமையான நிலையிலேயே பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் இரத்தினபுரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகச் செய்திகள் வந்திருந்தன. அங்கிருந்து விடுவிக்கப்படவிருந்த நிலையில் கைது செய்யப்பட்டதன் பின்னரே அவர் இவ்வாறு விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளார் என்பது பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பதிலிருந்து அறிய முடிகிறது. இவ்வாறு என்ன நிலைமையில் அவர் வாக்குமூலம் அளித்தார் என்பது தெரியவில்லை. விசாரணையில் கடுமை அல்லது கொடுமையின் காரணமாகவும் இவ்வாறு வாக்குமூலம் அளிக்கப்படுவதுண்டு. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எவ்வாறு விசாரிக்கப் படுவார்கள் என்பது பற்றி பொதுவாக மக்கள் மத்தியில் பயங்கரமான அபிப்பிராயங்கள் உண்டு. சுதர்சன் எந்த ஒரு நீதிவான் முன்னிலையிலும் இதுவரை நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு நிறுத்தப்பட்டால் பாதிக்கப்பட்டவரான அவருக்கு பழிவாங்கல்களிலிருந்து பாதுகாப்பும் அளிக்கப்படுமானால் உண்மைகள் வெளிவரக்கூடும் அப்படியான ஒரு நிலையில் பொதுநல நோக்கமுடைய சட்டத்தரணிகளும் அவருக்காக முன்னிலையாகும் வாய்ப்பு உண்டு. இல்லையெனின் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து விடுபட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு மாறி வருவதற்காக அவர் இப்படி "உயிர் ஆபத்தான" முறையில் தாக்கிக் கொண்டார் என்று அவர் மீது சுமத்தப்பட்டுள்ள பழி நீங்காது. இவ்வாறு எத்தனை இளைஞர்களை இந்த நாடு வெஞ்சிறையில் வைத்து கொடுமைப்படுத்துகிறதோ- உனக்குத்தான் வெளிச்சம் பராபரமே !

# ரணில் மீதான நம்பிக்கை திஸ்ஸவின் தவறான கணிப்பு

சேரலாதன்





ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவே மிகப் பொருத்தமானவரென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்திருக்கிறார். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுதான் இதைக் கேட்டதும் நினைவுக்கு வருகின்றது. திஸ்ஸ அத்தநாயக்க தமது மனச்சாட்சியின் பக்கமாக நின்று இதைக் கூறினாரா அல்லது செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்குக் கூறி வைத்தாரா என்பது புரியவில்லை. ஆனால் அவரின் இந்தக் கூற்றை எவரும் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை என்றுதான் தோன்றுகின்றது.

ஜனநாயக விழுமியங்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, அரசியல் சாசனத்தில் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றங்களைச் செய்து கொண்டு மூன்றாவது பதவிக் காலத்தையும் ருசிக்கும் முயற்சியில் ஜனாதிபதி மஹிந்தர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். மக்கள் விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் எந்த வகையிலாவது மூன்றாவது தடவையாகவும் பதவிக் கதிரையில் அமர்ந்து விடுவேன் என்பது அவரது தணியாத நம்பிக்கை. ஆனால் இதற்குக் கடிவாளம் இட்டு நிறுத்தக்கூடிய ஒரு போட்டியாளர்தான் இன்றைய தேவையாகவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. இந்த நிலையில் திஸ்ஸ அத்தநாயக்கவின் கருத்து வெளிவந்துள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வருவதே வழக்கமாக இருந்து வந்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சியை சாணக்கியம் மிக்க தலைவர்கள் வழி நடத்திச் சென்றதால் அதன் கட்டுக்கோப்பு உடையாமல் பாதுகாக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உறவினர் என்ற வகையில் ரணிலுக்கு மிக இளம் வயதிலேயே அமைச்சுப் பதவி கிடைத்தது. பின்னர் பிரதமர் பதவிவரை இவரால் உயர முடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் இவரது சோதனைக்காலம் ஆரம்பித்தது. சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு முன்னால் இவரால் ஈடு கொடுக்க முடியவில்லை. தேர்தல்களில் கிடைத்த தொடர் தோல்விகள் ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே விரக்தியையும், சோர்வையும் ஏற்படுத்தியது. இதுவே கட்சி தாவலுக்கும் வழிவகுத்தது.

ஆனால் ஒரு பெரும்பான்மை இனத்தவர் என்ற வகையில் தமிழர்களுக்கு எதிரான விரோத மனப்பான்மை இவரது இரத்தத்திலும் ஊறியிருந்தது. விடுதலைப் புலிகளுடன் நேரில் மோதி வெல்ல முடியாது என்பதை உணர்ந்த இவர் தமது மாமனாராகிய ஜே.ஆரின் தந்திரத்தைப் பின்பற்றிக் காய்களை நகர்த்தினார். இதனால் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவரும், தளபதியுமான கருணா அம்மானை புலிகள் இயக்கத்திலிருந்து அந்நியப்படுத்த இவரால் முடிந்தது. இதுவே விடுதலைப் புலிகள் இவர் மீது கடுமையான காழ்ப்புணர்வு கொள்வதற்கு வழிவகுத்தது. இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய இருந்தும் மஹிந்தரிடம் இவர் தோல்வியடையக் காரணமாக அமைந்தது. அதன் பின்னர் தேர்தல்களில் தொடர் தோல்விகளையே ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கொண்டது. இதனால் கட்சிக்குள்ளேயே இவருக்கு எதிரான குரல்கள் எழுந்தன. ஆனால் ரணில் இவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் இவரது சோதனைக்காலம் ஆரம்பித்தது. சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு முன்னால் இவரால் ஈடு கொடுக்க முடியவில்லை. தேர்தல்களில் கிடைத்த தொடர் தோல்விகள் ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே விரக்தியையும், சோர்வையும் ஏற்படுத்தியது. இதுவே கட்சி தாவலுக்கும் வழி வகுத்தது. ஆனால் ஒரு பெரும்பான்மை இனத்தவர் என்ற வகையில் தமிழர்களுக்கு எதிரான விரோத மனப்பான்மை இவரது இரத்தத்திலும் ஊறியிருந்தது. விடுதலைப் புலிகளுடன் நேரில் மோதி வெல்ல முடியாது என்பதை உணர்ந்த இவர் தமது மாமனாராகிய ஜே.ஆரின் தந்திரத்தைப் பின்பற்றிக் காய்களை நகர்த்தினார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் நிலையில் மஹிந்தரை எதிர்த்து நிற்பதற்குத் தகுதியான ஒருவரைத் தேடும் படலம் ஆரம்பித்துள்ளது. இதனையொட்டியதாகவே திஸ்ஸ அத்தநாயக்கவின் கருத்து வெளிவந்துள்ளது. தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை ஆராயும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் ஆதரவை இழந்து வருவது தெரியவருகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் அசைக்க முடியாததொரு சக்தியாக விளங்கிய அவர் சற்று ஆட்டம் கண்ட நிலையில் இருந்து வருகின்றார்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மக்களுக்கு இல்லையென்பதே பிரதானமானதாகக் காணப்படுகின்றது. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதற்கு அமைவாக அவரது நிலை மாறிவிட்டது. இந்தச் சாதகமானதொரு நிலையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமானதொரு எதிரணி வேட்பாளரைக் களத்தில் இறக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

மேலும் சிறுபான்மையின மக்களின் வாக்குகளையும் பெறக்கூடிய ஒருவராக அவர் இருத்தல் வேண்டும். ஏனென்றால் ஐம்பது வீதத்துக்கும் மேலான வாக்குகளைப் பெறுவதற்கு இந்த வாக்குகள் அவசியமாகத் தேவைப்படும். ஆனால் சந்திரிகா, ரணில் போன்றவர்கள் ஏற்கனவே தமிழ் மக்களின் மனங்களில் வெறுப்பை ஏற்படுத்திக் கெண்டுள்ளனர். படைகளை ஏவி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை சந்திரிகா மீதும், [illegible]லைப்புலிகளைப் பலவீனப்படுத்தியமை ரணிலின் மீதும் வெறுப்பு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாகும். சரத் பொன்சேகா வையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இவர் இராணுவத் தளபதியாக இருந்த போது ஏற்பட்ட பாதிப்புக்கள் இன்னமும் தமிழர்களின் மனங்களில் பசுமரத்தாணியாகப் பதிந்து நிற்கின்றன. இந்த நிலையில் முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க ஓரளவு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஏதுநிலை காணப்படுகின்றது. ஏனென்றால் அவர் இதுவரை தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை எதிலும் ஈடுபட்டதாகத் தகவல் இல்லை.

ஆனால் ஜனாதிபதிக்கு எதிரான பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் இழுபறி நிலை ஏற்படத்தான் போகின்றது. அதிலும் ரணிலை ஏற்றுக்கொள்வதில் சாதகமானதொரு நிலை ஏ[illegible]டுமென எதிர்பார்க்க முடியாது. அவரது கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு உள்ள நிலையில் வெளியில் இருந்து ஆதரவை எதிர்பார்க்க முடியாது. .

சிலவேளை ரணில் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் முதலில் மகிழ்ச்சி அடைவது மஹிந்தராகத்தான் இருக்க முடியும். ஏனென்றால் ஷிராணிக்கு மட்டுமே அவர் அஞ்சுகின்றார். ஷிராணி பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு அவர் மீது அனுதாபமும் கொண்டுள்ளனர். மேலும் அவர் இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபடவில்லை என்பதுடன் கறைபடியாத கரங்களைக் கொண்டவர் என்ற மதிப்பையும் பெற்றுள்ளார்.

ஆகவே பொது வேட்பாளருக்கான போட்டிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதே ரணிலுக்குப் பெருமை சேர்க்கும் என்பதுடன் எதிர்காலத்தில் இவருக்கு வெற்றி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திவிடும்.

ஆகவே கட்சி அடிப்படையில் சிந்திக்காது தேசிய நலனில் அக்கறை செலுத்த வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியினரின் மிக முக்கிய பொறுப்பாகும். தற்போது ஓரளவு மீண்டுவரும் அதன் செல்வாக்கைத் தக்க வைக்க வேண்டுமாயின் இவ்வாறான சிந்தனைகளே அந்தக் கட்சிக்குள்ளிலிருந்து வெளிவர வேண்டும்.

ஆகவே ரணில் மீதான மதிப்பை வெளிப்படுத்தும் விதமாக திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட கருத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படத் தேவையில்லை என்றே தோன்றுகின்றது.

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமா?



ராஜகுமாரன்

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களின் படகுகள் உள்ளிட்ட உபகரணங்கள் விடுவிக்கப்படாததால் வெறும் கைகளுடனேயே அவர்களால் தமது நாட்டுக்குச் செல்ல முடிந்துள்ளது. இதே வேளை விரைவில் இலங்கைக்கு வருகை தரவிருக்கும் இந்தியாவின் வெளி விவகாரத் துறை அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றையெல்லாம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகக் கொள்ளமுடியும்.

ஆனால் இந்திய மீனவர்களை விடுவித்த இலங்கை அரசு அவர்களின் படகுகளை விடுவிப்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகைக்குக் காத்திருப்பதுதான் புரியவில்லை. இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கையொரு சுண்டைக்காய் நாடு என்றுதான் கூறவேண்டும். ஆனால் இலங்கை விடயத்தில் இந்தியா வளைந்து கொடுக்கும் செயற்பாட்டிலேயே நடந்து கொள்கின்றது.

இந்திய மீனவர் பிரச்சினை என்பது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. 1974 ஆம் ஆண்டு இந்தியா கச்சதீவை இலங்கையிடம் தாரை வார்த்த பின்னரும் இந்திய மீனவர்கள் கச்சதீவை அண்டிய கடற்பகுதியில் தொழிலை மேற்கொண்டு வந்தனர். தமது வலைகளை உலர வைப்பதற்கும், ஓய்வெடுப்பதற்கும் கச்சதீவைப் பயன்படுத்தினர். கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்திலும் இவை உறுதி செய்யப்பட்டிருந்தன. ஆனால் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஆயுதமோதல் ஏற்பட்ட பின்னர் நிலைமை மாறிவிட்டது. கச்சதீவை அண்மித்த கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும் தாக்குதல்களுக்கு உள்ளாவதும் வாடிக்கையான நிகழ்வுகளாகி விட்டன. இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை முந்நூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்ததாகவும் தெரிவித்தனர். அத்துடன் பல லட்சம் ரூபா பெறுமதியான மீனவர்களின் படகுகள், வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தமது அவலங்களுக்கு எல்லாம் இந்திய மத்திய அரசே காரணமென அவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். தமிழகத்தின் இராமநாதபுரம் மன்னருக்குச் சொந்தமாக இருந்த கச்சதீவை இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது தேவையற்ற விதத்தில் இலங்கையிடம் கையளித்ததால் தமக்கு இந்த அவலம் நேர்ந்துள்ளதெனவும் அவர்கள் தெரிவித்தனர். தமிழர்கள் என்பதால் இந்திய மத்திய அரசு தம்மிடம் பாரபட்சமாக நடந்து கொள்வதாகத் தெரிவித்த அவர்கள் காங்கிரஸ் ஆட்சியும் தற்போதைய பா.ஜ.க.ஆட்சியும் தம்மைப் பொறுத்தவரையில் ஒன்றுதான் என்கின்றனர்.

இதேவேளை மோடி அரசு கடலில் எல்லைகள் வகுக்கவிருப்பதாக வெளிவந்த செய்திகளுக்கு இந்திய மீனவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித் துள்ளனர். இது தம்மை மேலும் துன்பங்களுக்கு இட்டுச் சென்றுவிடுமென்பது மீனவர்களின் அச்சமாகும்.

இதேவேளை இந்திய மீனவர்கள் வேறொரு கருத்தையும் தெரிவித்தனர். குஜராத் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சில வேளைகளில் பாகிஸ்தான் கடற்பரப்பினுள் நுழையும்போது அவர்களை பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்கின்றனர். ஆனால் மீனவர்களுக்கு அவர்கள் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை- நீதிமன்றத்தின் முன்னால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நிறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாலும் பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். மீனவர்களின் படகுகள் உள்ளிட்ட உபகரணங்களும் விடுவிக்கப்படுகின்றன. ஆனால் இலங்கை அரசு இவ்வாறு செய்யாமல் தமது உபகரணங்களைத் தடுத்து வைக்கின்றமை தம்மை படுகுழிக்குள் தள்ளி விடுவதாக இந்திய மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்படாது விட்டால் அது தொடரவே செய்யும்.


# மருத்துவப் பண்பு என்றால் என்ன?

மருத்துவர்
சி.யமுனாநந்தா

நோயுற்ற ஒரு நோயாளி வைத்தியசாலைக்கு தனது நோய் பற்றிய வேதனையுடனும் ஏக்கத்துடனும் வரும்போது மருத்துவர்கள் அன்றேல் வைத்தியசாலைப் பணியாளர்கள் நற்சேவை செய்தலே சிறந்த மருத்துவப் பண்பாகும். இந்தச் சேவையை நாம் அரசியலாக்கக் கூடாது. வர்த்தகமாக்கக் கூடாது. தனிப்பட்ட இச்சைக்கு உட்படுத்தலாகாது.

தவறு செய்யும்போது அதனைத் தட்டிக் கேட்காது விடுவதும் தவறான மருத்துவப் பண்பாகும். வைத்தியசாலையில் மருந்துகள் இலவசமாக உள்ளபோது, நோயாளிகளை மருந்து முகவர்களின் கையூட்டலுடன் வெளியே மருந்துகளை வாங்குமாறு கூறுவதோ, தேவையற்ற இரத்த ஆய்வுகளை வெளியே செய்யுமாறு பணிப்பதுவோ தவறானதாகும். மருத்துவர்கள் உழைக்கத்தான் வேண்டும். ஆனால் அது கண்ணியமானதாக இருத்தல் வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சாவகச்சேரியில் இருந்து ஒரு தாய் தனது குழந்தையுடன் வந்தார் நோயாளர் பார்வையிடல் அறையில் இருந்த மருத்துவர் அந்தத் தாயிடம் இருந்த ஆய்வு கூடச் சோதனைகளை எடுத்து நோக்கினார். பின்னர் அந்த அம்மாவிடம் இவ்வளவு சோதனைகளையும் ஏன் வீண் செலவில் செய்தீர்கள். இதனைவிடுத்து 40 ரூபா கொடுத்து இங்கே நேரடியாக வந்து இருக்கலாமே என்றார்? அதற்கு அந்தத் தாய் சாவகச்சேரி வைத்தியசாலையில் தனது குழந்தைக்கு சுகமில்லை என்று சென்றதாகவும் அங்குள்ள வைத்தியர்கள் பனடோல் சிரப் முதல்கொண்டு வெளியே வாங்குமாறு கூறியதாகவும் தெரிவித்தார். இவ்வளவு ஆய்வுகூடச் சோத னைகளையும் வெளியே செய்யுமாறு கூறினர் என்றும் அவர் தெரிவித்தார். வெளி ஆய்வு கூடங்கள் மருத்துவச் சோதனை ஒவ்வொன்றுக்கும் அதனை அனுப்பும் வைத்திய அதிகாரிக்கு என பிரத்தியேக கவனிப்பு வழங்குகின்றன. இவை யாவும் பல வருடங்களாக நடைபெறுகின்றன.



அரச மருத்துவ சங்கம் மீதும் நிதிக்கையாடல் செய்ததாக முறைப்பாடுகள் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவை யாவும் நாம் மருத்துவப் பண்பில் இருந்து தூர விலகிச் செல்கின்றோம் என்பதற்கான அடையாளங்கள். இந்த விலகல்கள் மாற்ற முடியாத நிலைக்குச் செல்லும் முன்னர் பண்புள்ள மனிதராக நாம் மாறல் வேண்டும். ஒரு சிலர் செய்யும் தவறான அணுகுமுறைகள் முழு மருத்துவச் சமூகத்தினையுமே பாதிக்கும். துரதிர்ஷ்டவசமாக இன்று எமக்கு முன் மாதிரியாக இவற்றை எடுத்துக் கூற எவரும் இல்லை. ஆனால் அதற்காக நாம் வாழா திருக்கக் கூடாது. ஒன்றில் திருந்த வேண்டும் அன்றேல் திருத்துவிக்கப்படல் வேண்டும். முறைசாராக் கையூட்டலுக்கு மருத்துவ சமூகம் தள்ளப்படுகின்றது என்ற உண்மை அதிர்ச்சியானதே.

*"நோயினில் உழைப்போம் என்றிட்டால்*
*நாயினும் கடையோம் ஆவோம்"*

ஒவ்வொரு குழந்தையும் சிறு வயதில் தா[...] மருத்துவனாக வந்து சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துட[...] படிக்கின்றது. ஆனால் படித்து முடித்த பின்[...] சேவை என்பதன் தேவை அற்ற தன்மை[...] சூழலால் உருவாக்கப்படுகின்றது. அ[...] அளவுக்கு பொருளாதாரச் சுமை பழுவா[...]கப்பட்டு உள்ளது. ஆனால் அதன் வரம்புகளை நாம் சரியாகக் கட்ட வேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செயற்படுவது நன்மையைத் தரும். பிள்ளைகள் எதிர்காலம் குறித்து தேவையான பணிகளைக் கவனிப்பீர்கள்.



**இடபம்**: புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின்போது கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கச் செய்யும். எதிர்பால் இனத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும்.



**மிதுனம்**: வியாபாரம் தொடர்பாக செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிப்போகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும்.



**கடகம்**: உறவினர்கள் வருகை இருக்கும். பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப் படுத்துவது வெற்றிக்கு உதவும்.



**சிங்கம்**: காரிய அனுகூலம் உண்டாகும். எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும். அறிவுத் திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதைக் கழிப்பீர்கள். மனோ தைரியம் கூடும். மதிப்பு கூடும்.



**கன்னி**: தொழில் வியாபாரம் சிறப்பான முன்னேற்றம் பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு பெறுவார்கள். சிலருக்கு உத்தியோகம் கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும்.



**துலாம்**: நீண்ட நாள்களாக செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் வரும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**விருச்சிகம்**: எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும்.



**தனுசு**: தொழில், வியாபாரம் சுமாராக நடக்கும் பழைய மிகுதிகளை பெற்றுக்கொள்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்து முடித்து நன்மை பெறுவீர்கள்.



**மகரம்**: உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை காதில் வாங்காதவர் போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும்.



**கும்பம்**: நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். அறிவுத் திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும்.



**மீனம்**: தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணும். தொழில் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயற்றிறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம்.

## நாளை

**ஆவணி-03 செவ்வாய்க்கிழமை | 19.08.2014**

திதி: நவமி மு.ப.11.30 வரை
நட்சத்திரம்: ரோகிணி
மா.06.19 வரை

சுபநேரம்: 10.35-12.05 வரை
இராகுகாலம்: 03.05-04.35 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இறைவனை நாடுவது பக்தி யோகத்தின் முதற்படியாகும்

மனப்பூர்வமாகவும் ஆழ்ந்த உணர்வோடும் இறைவனை நாடுவது பக்தி யோகத்தின் முதற்படியாகும். இறைவனைத் தவிர மற்ற அனைத்தையும் நாம் விரும்புகிறோம். ஏனெனில் புற உலகத்தில் நமது ஆசைகள் அனைத்தும் நிறைவேறி விடுகின்றன. நமது தேவைகள் தூலப் பிரபஞ்சத்துடன் தொடர்புடையனவாக இருக்கும்வரை கடவுளின் தேவையை நாம் சற்றும் உணர்வது இல்லை. வாழ்வில் பல வகையில் மொத்துண்டு, ஏமாந்த பின்னர்தான், உயர்ந்த ஒன்றை நாடவேண்டும் என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது, அதன் பிறகே இறைவனை நாம் நாடுகிறோம்.

பக்திக்கு அழிக்கும் தன்மை இல்லை. நமக்குள்ள திறமைகள் எல்லாம் இறைவனை அணுகி முக்தியைப் பெறும் வழிகளே என்று பக்தி நெறி கூறுகிறது. நமது திறமைகள் அனைத்தையும் இறைவனிடம் நாம் திருப்ப வேண்டும். நிலையற்ற புலனின்பங்களில் வீணாகச் செலுத்தும் அன்பை, இறைவனிடம் நாம் செலுத்த வேண்டும்.

பக்தியைப் பற்றி மேலை நாட்டினராகிய நீங்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபட்டது. அது எதுவெனில், பக்தியில் இம்மியளவு அச்சத்துக்கும் இடம் இல்லை; யாரையும் சமாதானம் செய்யவோ இறைஞ்சவோ அவசியமும் இல்லை. இறைவனைக் குழந்தையாகக் கருதி வழிபடுகிற பக்தர்களும் இருக்கிறார்கள். இறைவனைக் குழந்தையாக வழிபடும்போது, அச்சமோ பயபக்தி உணர்ச்சியோ சிறிதும் இருப்பதில்லை. உண்மையான பக்தி இருக்கும் இடத்தில் அச்சம் இருக்காது. சிறிதளவேனும் அச்சம் இருக்கும் இடத்தில் பக்தி தோன்றாது. இறைவனிடம் இரப்பதும் பேரம்பேசுவதும் பக்தியில் இல்லை. இறைவனிடம் எதையேனும் இரப்பது இழுக்கானது என்று பக்தன் நினைக்கிறான்; உடல் நலத்தையோ செல்வத்தையோ அல்லது சொர்க்கத்தையோ கூட பக்தன் இறைவனிடம் கேட்பதில்லை.

# உடல் இழையங்களை சிதைக்கும் புதிய பக்றீரியா



மனிதன் உட்பட நாய்கள், எலிகள் என்பவற்றின் இழையங்களை தாக்கி அழிக்கும் பக்றீரியாவை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஜோன் ஹோப்பிங்ஸ் ஹிம்மல் புற்றுநோய் மத்திய நிலையத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்களால் Clostridium novyi (C. novyi) என்று அழைக்கப்படும் இந்த பக்றீரியா கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பக்றீரியாக்கள் குறைந்தளவு ஒட்சிசன் வாயு உள்ள நிலையிலும் உயிர்வாழக் கூடியதாக இருப்பதுடன், உடலில் வளரும் கட்டிகளில் காணப்படும் கலங்களை அதிகளவில் தாக்குகின்றது.

இதனால் இந்தப் பாதிப்புக்கு கீமோதெரபி முறையிலோ அல்லது கதிர்ப்பு முறையிலோ சிகிச்சை அளிப்பது கடினம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | | 4 | 9 | 2 | | |
| | | 9 | 2 | | 7 | | 5 | 4 |
| | | | | | 1 | | | |
| 4 | 3 | | | 1 | | 8 | 9 | 7 |
| | | 8 | | | | 1 | | |
| 1 | 6 | 7 | | 9 | | | 3 | 2 |
| | | | 9 | | | | | |
| 5 | 7 | | 1 | | 6 | 9 | | |
| | | 6 | 8 | 7 | | 4 | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 1 | 8 | 3 |
| 7 | 1 | 6 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 8 | 9 | 3 | 1 | 5 | 4 | 7 | 2 | 6 |
| 9 | 2 | 4 | 5 | 1 | 6 | 8 | 3 | 7 |
| 3 | 6 | 8 | 4 | 2 | 7 | 5 | 9 | 1 |
| 1 | 5 | 7 | 8 | 9 | 3 | 3 | 4 | 2 |
| 6 | 7 | 2 | 9 | 4 | 5 | 3 | 1 | 8 |
| 4 | 3 | 9 | 7 | 8 | 1 | 2 | 6 | 5 |
| 5 | 8 | 1 | 3 | 6 | 2 | 9 | 7 | 4 |

# அரையிறுதிக்குள் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்



கரணவாய், ஓக.18

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குள் முதலாவது அணியாகத் தெரிவானது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், கரவெட்டி கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின. இடைவேளை வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தபோதும் அது பலிக்கவில்லை. இதனால் ஆட்டம் இடைவேளையின் போது சமநிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 11 ஆவது நிமிடத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக வீரர் ஒருவர் எதிரணியின் கோல் பரப்பினுள் முறையற்ற வகையில் உள் நுழைந்ததால் தண்டனை உதை வாய்ப்பொன்று திக்கம் இளைஞர் அணிக்கு கிடைத்தது. இதனை அந்த அணி வீரர் தீபன் நேர்த்தியாக கோலாக்கினார்.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் சூடுபிடிக்க பந்து இரு அணி வீரர்களினதும் கால்களுக்குள் அகப்பட்டு அங்கும் இங்கும் திண்டாடியது. இதன் போது பல சந்தர்ப்பங்களில் கோல் போடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதனை இரு அணியினரும் கோட்டைவிட்டுக் கொண்டே இருந்தனர்.

ஆட்டம் நிறைவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும் போது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் யோகன் அருமையான கோல் ஒன்றைப்போட 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி முதலாவது அணியாக அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும், இளவாலை யங்ஹென்றிஸ்விளையாட்டுக் கழகமும் மோதின. தொடக்கம் முதல் இறுதிவரை ஆட்டத்தை தமது காட்டுப்பாட்டில் வைத்திருந்த ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 5:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் றோயல் அணி சார்பாக சயந்தன், வெள்ளை, கபில், வினோத் மற்றும் ஹென்றிஸ் வீரர் சுலோசன் தலா ஒரு கோலையும்ஹென்றிஸ் அணி சார்பாக மனோ ஒரு கோலையும் போட்டனர். (ரி-108)

## வெற்றி பெற்றன சக்திவேல், விண்மீன் அணிகள்

கரணவாய், ஓக.18

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டங்களில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் 3:0 என்ற அடிப்படையில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தையும், பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் 7:0 என்ற அடிப்படையில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தையும் தோற்கடித்தன.

**ஆட்டம் முழுவதும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விண்மீன் விளையாட்டுக்கழகம் 7:0 என்ற கோல் அடிப்படையில் இலகுவாக வெற்றி பெற்றது.**

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுக்காலை இடம்பெற்ற முதல் ஆட்டத்தில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும், கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின.

பலத்த எதிர்பார்ப்புடன் ஆரம்பமான இந்தப் போட்டியில் 13 ஆவது நிமிடத்திலும் 16 ஆவது நிமிடத்திலும் சக்திவேல் விளையாட்டுக்கழக வீரர்களான ரகுலி, ரஜீவ் அடுத்தடுத்துக் கோல்களைப் போட ஆட்டத்தில் அனல் பறக்கத் தொடங்கியது. எதிரணியினர் கோல் பரப்பை இரு அணியினரும் மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு நிலை காணப்பட்டது. ஆனாலும் 2:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் தொடர்ந்து ஆட்டத்தில் .இரு அணி வீரர்களும் சம பலத்துடன் முட்டி மோதினர்.

இதனால் இரு அணியினரும் கோல்களைப் பெற முடியாது திணறினர். ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் சக்திவேல் விளையாட்டுக் கழக வீரர் மயூரன் அற்புதமாக கோல் ஒன்றைப் போட 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது சக்திவேல் விளையாட்டுக் கழகம்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம், சென். செபஸ்தியார் விளையாட்டுக்க ழக 'பி' அணியும் மோதின. ஆட்டம் முழுவதும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விண்மீன் விளையாட்டுக்கழகம் 7:0என்றகோல்அடிப்படையில் இலகுவாக வெற்றி பெற் றது. அந்த அணி சார்பாக காண்டீபன் 3 கோல்களையும் மொரின் தரஸ் 2 கோல்களையும் ரஞ்சித் அருள் தாஸ் இரு கோல்களையும் போட்டனர். (ரி-108)

# நவசக்தி, உதயதாரகை அணிகள் வெற்றி

கரணவாய், ஓக. 18

.. பிரகாஸ் அடுத்தடுத்து 4 கோல்களைப் போட 5:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் உடுப்பிட்டி சிவகுமரனை வீழ்த்தியது கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம்.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில்நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்த ஆட்டத்தில் 7 ஆவது நிமிடத்தில் சிவகுமரன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த துஷ்யந்தன் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். அதற்குப் பதிலடி கொடுக்குமாற் போல் அடுத்த 7 ஆவது நிமிடத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக வீரர் பிரகாஸ் ஒரு கோலைப் போட ஆட்டம் 1:1 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் தொடர்ந்த ஆட்டத்தில் எதிரணியினர் எதிர்பாராத விதமாக பிரகாஸ் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட நவசக்தி அணியின் வெற்றி உறுதியானது. ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது அந்த அணியின் வீரர்அரவிந்தன்ஒரு கோலைப் போட 5:1 என்ற அடிப்படையில் நவசக்தி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகமும் மோதியது. பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 9 ஆவது நிமிடத்தில் தர்சன் ஒரு கோலைப் போட்டார். இதனால் ஆட்டம் சூடு பிடித்ததும் இரு அணியினரும் கோல் போட எடுத்த முயற்சிகள் வீணாக 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் ஆட்டம் ஆரம்பமாகி 8 ஆவது நிமிடத்தில் அபிராமும், 10 ஆவது நிமிடத்தில் தர்சனும் கோல் போட்டு அசத்த உதயதாரகை அணி 3:0 என்று முன்னிலை பெற்றது. ஆனாலும் கடுமையாகப் போராடிய சென்.மேரிஸ் அணியால் 12 ஆவதுநிமிடத்தில்ஒருகோலை மட்டுமே போட முடிந்தது. இதனால் ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற கோல் அடிப்படையில் உதயதாரகை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு நகர்ந்தது. (ரி-108)

## அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

கரணவாய், ஓக.18

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிலைக்கேணி, சென்.செபஸ்தியார் விளையாட்டுக்கழகம், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

உடுத்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆழியவளை அருணோதய விளையாட்டுக் கழகமும் வெற்றிலைக் கேணி சென்.செபஸ்தியான் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 20 ஆவது நிமிடத்தில் அருணோதயா வீரர் இராமகிருஷ்ணன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து 26 ஆவது நிமிடத்தில் சென்.செபஸ்தியான் அணி வீரர் அலக்ஸ் பந்தொன்றைத் தட்டி உயர்த்தி அடிக்க அதன் கயித் உயர எழும்பி தலையால் இடித்து கோலாக்கினார். இதனைத் தொடர்ந்து 1:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் 42 ஆவது நிமிடத்தில் அலக்ஸும், 52 ஆவது நிமிடத்தில் அருமையும், 59 ஆவது நிமிடத்தில் அலக்ஸும் மாறி மாறி கோல் போட 4:1 என்ற நிலையில் சென். செபஸ்தியான் அணி வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்குமுன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 7:0 என்ற கோல்களால் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

அந்த அணி சார்பாக சதீஸ்குமார் 3 கோல்களையும், யோகன் 2 கோல்களையும், அகிலதீபன் 2 கோல்களையும் போட்டனர். (ரி-108)

## அடுத்த சுற்றுக்கு நவஜீவன்ஸ், உதயசூரியன்

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம்நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின் றன.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதின மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 15 நிமிடங்கள் வரையும் இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் சம பலத்துடன் முட்டி மோதினர்.

ஆட் டத்தின் 19ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் கோபிநாத் அடித்த முதலாவது கோலுடன் ஆட்டத்தின் போக்கே முற்றாக மாறியது. தொடர்ந்து 23 ஆவது நிமிடத்தில் பசீலன் தனது அணிக்கான இரண்டாவது கோல் போட இடைவேளையின் போது நவஜீவன்ஸ் அணி 2:0 என முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி சார்பாக பிரியந்தன் 3ஆவது கோலைப் போட நவஜீவன்ஸ் அணியின் வெற்றி உறுதியானது. இந்தச் சூழ்நிலையில் 14 ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக வீரர் சசிதரனால் ஒருகோல் பெறப்பட 3:1 என்ற அடிப்படையில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்குமுன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் எதிரணியினரின் பெரும் எதிர்ப்புக்கள் எவையும் இன்றி 4:0என்ற கோல்கள் அடிப்படையில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. அந்த அணி சார்பாக கவியன், செந்தூரன், ஸ்ரீகரன் மற்றும் சுதாகரன் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டு அசத்தினர். (ரி-108)

## இன்றைய ஆட்டங்கள்



கரணவாய், ஓக.18

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

காலை 8.30 மணிக்கு வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியார் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி யுத் காலை 9.30 மணிக்கு வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் எதிர் செம்பியன்பற்று பிலிப் நேரிஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப.3.30 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30 மணிக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் எதிர் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம். (ரி-108)

# சின்சினாட்டி ஓபன் ரென்னிஸ் அரை இறுதியில் ரோஜர் பெடரர்



அமெரிக்காவில் நடந்து வரும் சின்சினாட்டி ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் விளையாட, சுவிஸ் நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் தகுதி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தின் ஆண்டி முரேவுடன் நேற்றுமுன்தினம் மோதிய பெடரர் 6-3, 7-5 என்ற நேர் செட்களில் வென்று அரைஇறுதிக்கு தகுதி பெற்றார். மற்றொரு சுவிஸ் வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா தனது கால் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸின் ஜூலியன் பென்னட்யூவிடம் 6-1, 1-6, 2-6 என்ற செட் கணக்கில் தோற்று வெளியேறினார். கனடாவின் மிலோஸ் ரயோனிக் 6-1, 6-0 என்ற நேர் செட்களில் இத்தாலியின் பேபியோ பாக்னினியை மிக எளிதாக வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார். டேவிட் பெர்ரர் 6-4, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் சக ஸ்பெயின் வீரர் டாமி ராப்ரெடோவை வீழ்த்தினார். அரை இறுதி ஆட்டங்களில் பெடரர் - ரயோனிக், பெர்ரர் - ஜூலியன் மோதுகின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில், அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 6-1, 6-3 என்ற நேர் செட்களில் செர்பியாவின் ஜெலினா ஜன்கோவிச்சை எளிதாக வென்றார். ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா 3-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் ரோமானியாவின் சிமோனா ஹாலெப்பை வீழ்த்தி அரை இறுதிக்கு தகுதி பெற்றார். போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவுடன் மோதிய டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி 6-4, 7-6, 7-5 என்ற நேர் செட்களில் போராடி வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். மற்றொரு கால் இறுதியில் செர்பியாவின் அனா இவானோவிச் 6-2, 6-3 என்ற நேர் செட்களில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவை வீழ்த்தினார். மகளிருக்கான அரை இறுதி ஆட்டங்களில் செரீனா வில்லியம்ஸ் - கரோலின் வோஸ்னியாக்கி, அனா இவானோவிச் - மரியா ஷரபோவா மோதுகின்றனர். (ரி)

## பெற்ற தவறிய 50

தனது இறுதி இன்னிங்ஸில் ஆடிய மஹேல ஜெயவர்த்தன 54 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இது இவர் டெஸ்ட் ஆட்டங்களில் பெற்றுக் கொண்ட 50ஆவது அரைச்சதமாகும். அதேவேளை இந்த ஆட்டத்தின் இரு இன்னிங்ஸ்களிலும் ஆட்டமிழந்து 50 என்ற ஓட்டசராசரியைத் தக்க வைக்க மொத்தம் 94 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. ஆனால் இரு இன்னிங்ஸிலும் ஆட்டமிழந்த அவர் 58 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டார். இதனால் 50 என்ற சராசரியை 36 ஓட்டங்களால் தவறவிட்டுள்ளார். தற்போது டெஸ்ட் ஆட்டங்களில் இவரது ஓட்ட சராசரி 49.84 ஆகும்.

149 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள மஹேல ஜெயவர்த்தன 7 இரட்டைச் சதங்கள், 34 சதங்கள், 50 அரைச்சதங்கள் உட்பட 11,814 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (ரி)



# டோனிக்கு டைவ் அடிக்க தெரியாதாம்

இந்திய அணித்தலைவரும், இலக்குக் காப்பாளருமான மகேந்திர சிங் டோனி ஸ்லிப் களத்தடுப்பில் பறந்து போய் பிடியெடுப்புக்களை மேற்கொள்ள மாட்டார் எனக் இந்திய களத்தடுப்பு பயிற்சியாளர் டிரவர் பென்னி கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் இந்திய அணியின் துடுப்பாட்டம், களத்தடுப்பு என்பவற்றில் மிக மோசமாக உள்ளன என பல்வேறு தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. களத்தடுப்பைப் பொறுத்த வரை ஸிலிப் திசையில் சென்ற பிடியெடுப்புகள் அதிகமாகத் தவற விட்டிருந்தன. நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் பத்திற்கும் அதிகமான பிடியெடுப்பு வாய்ப்புக்கள் ஸ்லிப் திசையினூடாக சென்றன. இதைப் பற்றி விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில் அதைப் பற்றி பெரிதாகப் பதற்றமடையத் தேவையில்லை என்று டிரவர் பென்னி கூறியிருப்பது கிரிக்கெட் அரங்கில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

எப்போதும் முதல் ஸ்லிப்பிற்கு முன்னால் செல்லும் பந்துகளை பொதுவாக இலக்குக் காப்பாளர் தான் பாய்ந்து பிடிப்பது வழக்கம். ஆனால் டோனி அதை செய்வதில்லை.இதனால் அவரது இலக்குக் காப்பு மீதும் அவரது உடல் தகுதி மீதும் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இது பற்றி இந்திய அணியின் களத்தடுப்பு பயிற்சியாளர் டிரவர் பென்னி கூறுகையில்,கிரிக்கெட்டில் இவ்வாறு நடப்பது சாதாரண விடயம். ஸ்லிப்பில் பிடியெடுப்பைத் தவற விடுவது பற்றி நாங்கள் விவாதித்து வருகிறோம். இந்த விடயம் பற்றி பதற்றப்படவேண்டிய அவசியமில்லை. முதல் ஸ்லிப்பில் உள்ள களத்தடுப்பாளர் பிடியெடுப்பை பிடிக்கட்டும் என்று டோனி விட்டுவிடுகிறார். இதனை முதல் ஸ்லிப் களத்தடுப்பாளர் அறிந்து செயல்படுவது அவசியம். டோனி முதல் ஸ்லிப் திசையில் டைவ் அடித்துக் பந்தைப் பிடிக்கமாட்டார் என்பதை ஸ்லிப்பில் உள்ள களத்தடுப்பாளர் புரிந்து கொண்டால் போதும். ஆனால் அவை பிடியெடுக்கப்படுவதிலும் பார்க்க தவறவிடப்படுவதே அதிகமாக உள்ளது. எனவே இதனைச் சரிசெய்ய பல்வேறு ஸ்லிப் சேர்க்கைகள் பற்றி யோசித்து செயல்படுத்தி வருகிறோம். இது பற்றி பதற்றப்பட வேண்டியதில்லை என்று கூறியுள்ளார்.

இதேவேளை தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஈடுபடும் வர்ணனையாளர்கள் தெரிவிக்கையில் டோனிக்கும் முதல் ஸ்லிப்பிற்கும் இடையே இடைவெளி அதிகமாக இருக்கிறது என்றும், இதனால் ஸ்லிப்பிற்கும் டோனிக்கும் இடையே சில பிடியெடுக்கும் வாய்ப்புகள் தவறவிடப்படுவதாகவும், டோனி அவற்றை பிடியெடுக்க முயற்சி செய்வதில்லை என்ற புகார்களை எழுப்பிய வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)



# வெற்றி ஏணியின் உச்சியில் மஹேல டெஸ்ட்



கொழும்பில் நடைபெற்று வரும் மஹேல ஜெயவர்த்தனவின் இறுதி டெஸ்ட் ஆட்டத்தை வெற்றி பெற்று அவருக்கு வெற்றிக் கனியைப் பறித்து பரிசாகக் கொடுக்க இலங்கை அணி வெற்றி ஏணியின் உச்சத்தில் உள்ளது. ஆட்டத்தின் இறுதிநாளான இன்று பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 144 ஓட்டங்கள் தேவைப்பட 7 இலக்குகளை இழந்துவிட்ட நிலையில் இலங்கை அணி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய தினம் ஆட்டத்தைத் தொடர்ந்த இணையற்ற இணைப்பாட்ட ஜோடிகளுக்கிடையில் 107 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் சங்கக்கார 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, தன் ஜோடி பிரிந்த கவலையில் ஜெயவர்த்தன 54 ஓட்டங்களுடன் வெளியேறினார். களம்புகுந்த பொறுப்புமிக்க அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஒரு முனையைப் பாதுகாக்க மறுமுனையில் வழமை போன்று சீரான இடைவெளிகளில் இலக்குகள் வீழ்த்தப்பட்டன. திரிமன்னே 10 ஓட்டங்களையும், டிக்வெல்ல 21 ஓட்டங்களையும், தம்மிக்க பிரசாத் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள தில்ருவான் பெரேரா, ரங்கண ஹேரத், வெலிகெதர ஆகியோர் ஓட்டங்களைப் பெறாமல் வெளியேறினர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் தனித்திருந்த அஞ்சலோ மத்தியூஸ் 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பாகிஸ்தான் அணி சார்பாக வகாப் ரியாஷ், சயீட் அஜ்மல் தலா மூன்று இலக்குகளையும், அப்துர் ரெஹ்மான் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

271 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப இலக்குகள் தம்மிக்க பிரசாத்தின் வேகத்தில் வீழ்த்தப்பட ஹேரத் தன் பங்கைத் தொடர்ந்தார். சீரான இடை வெளிகளில் இலக்குகள் வீழ்த்தப்பட 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது பாகிஸ்தான். முதல் இன்னிங்ஸில் தத்தளித்த பாகிஸ்தானை மீட்டெடுத்த சபீக்-சர்பிரஷ் ஜோடி இரண்டாவது இன்னிங்ஸிலும் தமது இணைப்பாட்டத்தை தொடர்ந்து வெற்றியைப் பெற முயற்சித்தனர். ஆனால் ஆறாவது இலக்குக்காக 55 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் அசாத் சபீக் 32 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். நேற்றைய ஆட்டநேர முடிவின் போது பாகிஸ்தான் அணி 7 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல் இன்னிங்ஸில் சதம் பெற்ற சர்பிரஷ் அகமட் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார். இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் ஹேரத் 4 இலக்குகளையும், பிரசாத் 2 இலக்குகளையும், பெரேரா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.


முதல் இனிங்ஸில் தம்மிக்க பிரசாத் வீசிய பந்தில் வலது புறத் தலைப்பகுதியில் காயமடைந்திருந்த யுனைட்கான் இரண்டாவது இன்னிங்ஸில் களத்தடுப்பில் ஈடுபட்டிருக்கவில்லை. அதேவேளை அவர் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடவும் களமிறங்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வெற்றிக் கனியை மஹேலவுக்குப் பரிசளிக்க இலங்கை அணிக்கு இன்னமும் இரண்டு இலக்குகளையே கைப்பற்ற வேண்டியுள்ளது. (ரி)

# டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது இந்தியா



இங்கிலாந்து மண்ணில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி. இங்கிலாந்துக்கு சென்றிருந்த இந்திய அணி அங்கு இம் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நான்கு நாட்களைக் கொண்ட ஒரேயொரு டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடியது. இதில் 6 இலக்குகளால் ஆட்டத்தை வென்ற இந்திய அணி தொடரையும் சுவீகரித்துக் கொண்டது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக சாரா ரெய்லர் 30 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார். இந்திய அணியில் நிரஞ்சனா 4 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். தனது முதல் இன்னிங்ஸில் ஆடிய இந்தியா நிரஞ்சனாவின் 27 ஓட்டங்களின் உதவியுடன் 114 ஓட்டங்களைப் பெற்று 22 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. இங்கிலாந்தின் ஜெனி குன் 5 இலக்குகளை வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்தின் குன் ஆட்டமிழக்காமல் பெற்ற 62 ஓட்டங்களின் துணையுடன் 202 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியாவின் கௌசாமி 4 இலக்குளை வீழ்த்தினார். 181 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணி 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. மந்தனா 51 ஓட்டங்களையும், மிதாலி ராஜ் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இங்கிலாந்து சார்பாக கேற் குரொஸ் 3 இலக்குகளை வீழ்த்தினார். (ரி)

# டோனிக்கு விருது வேண்டாம்



சூதாட்ட வழக்கில் விசாரிக்கப்பட்ட அணித்தலைவர் மகேந்திரசிங் டோனிக்கு பத்ம பூஷன் விருது வழங்கக் கூடாது என எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்திய அணிக்கு 2007இல் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம், 2011இல் சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணம் என இரண்டு உலகக் கிண்ணங்களை வென்றதையடுத்து அவருக்கு மத்திய அரசினால் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தது. அண்மையில் லோர்ட்ஸ்ஸில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி இவரது தலைமையின் கீழ் வரலாற்று வெற்றியைப் பெற்றிருந்தது. இதனையடுத்து நாட்டின் மூன்றாவது கௌரவமிக்க விருதானபத்ம பூஷன் விருதுக்கு டோனியின் பெயரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிந்துரை செய்திருந்தது. இந்நிலையில்.குறித்த விருதை டோனிக்கு வழங்கக்கூடாது என பி.சி.சி.ஐ.யின் அனுமதி பெறாத, பீகார் கிரிக்கெட் சங்க செயலர் ஆதித்யவர்மா கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நடந்த சூதாட்டம் தொடர்பாக டோனியிடம் விசா ரணை நடந்துள்ளது. இரண்டாவது முறையாகவும் அவரிடம் விசாரணை நடைபெறவுள்ளது. எனவே டோனி உட்பட முதற்கட்ட விசாரணை அறிக்கையில் இடம் பெற்றுள்ள எந்த கிரிக்கெட் வீரரின் பெயரையும் எவ்வித விருதுக்கும் பரிந்துரைக்கக் கூடாது. இறுதிக் கட்ட விசாரணை அறிக்கையின் தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கும் வரையில் காத்திருக்க வேண்டும். அதற்கு முன் விருது வழங்குவது அந்த விருதுக்கு கௌரவக் குறைவாக இருக்கும் என்றுவருந்துகிறேன் -என்று அவர் கூறி னார். (ரி)


## மரண அறிவித்தல்



### நரசிங்கம் தர்மலிங்கம்

*கருகம்பனை- கீரிமலை*

கருகம்பனை கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் தர்மலிங்கம் நேற்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், திலகவதியின் பாசமிகு கணவரும் இராமேஸ்வரன் காலஞ்சென்ற லிங்கேஸ்வரன்,மற்றும் சிவகுமாரி, ஜெயகுமாரி, விஜயகுமாரி, ஸ்ரீகுமாரி (பிரான்ஸ்), ஸ்ரீதேவி (கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தீபா, சோமகாந்தன், சுரேஸ்குமார், வேல்மாறன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், அருசப் பிரதீப் குமார், றக்சயன், லக்சிகன், ரபிசன், சஸ்வின், ஆதீதிரன்,ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2014) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. 0776465344

**தகவல்:**
குடும்பத்தினர்.


# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து ஓவலிலும் மூக்குடைபட்டது இந்தியா

ஐந்தாவது ஆட்டத்தின் தோல்வியும் உறுதியாகியிருந்த நிலையில் மூன்றாவது நாளிலேயே தோல்வியைத் தழுவி ஓவல் டெஸ்டிலும் மூக்குடைபட்டது இந்திய அணி. இன்னிங்ஸ் மற்றும் 244 ஓட்டங்களால் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

முதலாவது இன்னிங்ஸில் இந்தியா 148 ஓட்டங்களுக்கு சுருண்டு கொண்டது. அணித்தலைவர் டோனி மாத்திரம் 82 ஓட்டங்களைப் பெற்று ஆறுதல் அளிக்க ஏனைய வீரர்கள் படு மோசமாக விளையாடினர். தனது முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய இங்கிலாந்து 486 ஓட்டங்களைக் குவித்து 338 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. அந்த அணி சார்பாக ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அணித் தலைவர் அலெஸ்டயர் குக் 79 ஓட்டங்களையும், ஹரி பலன்ஸ் 64 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 45 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். இந்திய அணி சார்பாக இசாந்த் சர்மா 4 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், ஆரொன் 2 இலக்குகளையும், புவனேஸ் குமார் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தோல்வி என்பது உறுதியாகியிருந்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியின் வீரர்கள் போராட்டத்தை வெளிப்படுத்தாது சரணடைந்தனர். வழமை போல சீரான இடைவெளிகளில் இலக்குகள் வீழ்த்தப்பட இந்திய அணி 94 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஸ்டுவர்ட் பின்னி 25 ஓட்டங்களையும், தொடர்முழுவதும் ஏமாற்றி வந்த புஜாரா மற்றும் விராட் ஹோக்லி ஆகியோர் முறையே 11, 20 ஓட்டங்களையும் பெற்றனர். முதல் இன்னிங்ஸில் தனித்துநின்று போராடிய அணித்தலைவர் டோனி இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டமெதனையும் பெறாமல் பவிலியன் திரும்பினார். இங்கிலாந்து சார்பாக இரண்டாவது இன்னிங்ஸில் கிறிஸ் ஜோர்தான் 4 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன் 2 இலக்குகளையும், ஸ்டுவர்ட் ப்ரோட், கிறிஸ் வோக்ஸ் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர். இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரை 3-1 என்ற ரீதியில் கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சனும், தொடர் நாயகனாக இந்திய அணியின் புவனேஸ்குமாரும் தெரிவாகினர். (ரி)




# முத்தரப்புத் தொடரில் இருந்து வொட்சன் விலகல்

ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரரான ஷேன் வொட்சன் கணுக்கால் காயம் காரணமாக சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார்.

சிம்பாப்வே செல்லவுள்ள ஆஸ்திரேலிய அணி, முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. மூன்றாவது அணியாக தென் ஆபிரிக்கா விளையாடுகிறது. ஹராரேயில் வரும் 25இல் நடக்கும் முதல் போட்டியில் சிம்பாப்வே, ஆஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இத்தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் இடம் பெற்றிருந்தார். பிரிஸ்பேனில் நேற்றுமுன் தினம் நடந்த பயிற்சியின் போது வொட்சனின் வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து இவர், சிம்பாப்வே தொடரில் இருந்து விலக வேண்டி உள்ளது. இவருக்கு பதிலாக பிலிப் ஹியுஜஸ் தேர்வு செய்யப்பட்டார்.

இதுகுறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வெளியிட்ட அறிக்கையில், பயிற்சியின் போது வலது கணுக்காலில் காயமடைந்த வொட்சன் சிம்பாப்வேயில் நடக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டார். சிட்னியில் காயத்துக்கு சிகிச்சை மேற்கொள்ளவுள்ள இவர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்கவுள்ள அடுத்த தொடருக்கு தயாராக உள்ளார். சிம்பாப்வே தொடரில், இவருக்கு பதிலாக பிலிப் ஹியுஜஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார், என தெரிவிக்கப்பட்டது. (ரி)


## திருவருள் துணைகொண்டு மனதார வாழ்த்திடுவோம்



### உயர் திரு.
### வே. கணபதிப்பிள்ளை

பொறுமை காத்து உயர்ந்து மணி விழாக் கண்டின் புற்றிருக்கும் மாண்புமிகு V.K. கணபதிப்பிள்ளை ஐயா யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (அதிபர்) அவர்கள் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருவருள் துணைகொண்டு ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் பல சமூக சேவைகள், ஆன்மீக சேவைகள் எனப் பல சேவைகள் செய்து சைவப் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

க. விஜயகரன்
திருமதி. நாகதாரணி திலகராஜ்
திருமதி.பத்மினி கிறிஸ்கரன்
கு.பேரின்பநாதன் (அதிபர்)
சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் (J.P)

திரு.S.T இளம்குமரன்
விரிவுரையாளர்

# தமிழ் மொழியைக் கற்று வெளியேறிய 93 சிங்களப் பொலிஸாருக்கு சான்றிதழ்

மட்டக்களப்பு, ஒக.18

மட்டக்களப்பு - கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் மொழியைக் கற்று வெளியேறும் சிங்களப் பொலிஸார் 93 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பதிகாரி கே. பேரின்பராஜா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இந்தக் கல்லூரியில் தமிழ் கற்று வெளியேறும் ஆண் பொலிஸார் 90 பேருக்கும் பெண் பொலிஸார் 3 பேருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்தக் கல்லூரியில் இரண்டாம் மொழி தமிழைக் கற்று வெளியேறும் எட்டாவது அணி இதுவாகும்.

இவர்களுக்கு ஆறு மாதகாலம் சிறந்த தமிழ் மற்றும் சிங்கள மொழி வல்லுநர்களான உப பொலிஸ் பரிசோதகர்களான அன்புராஜ் சந்தியாகுமாரி, கிருஷ்ணகுமாரி ஜெயநந்தகுமார், பொலிஸ் சார்ஜன்ட் ரீ. சிங்கராஜா, வெளிக்கள உத்தியோகத்தர் லக்ஷ்மி நிர்மலகுமாரன் ஆகியோரால் பயிற்சியளிக்கப்பட்டதாக கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பதிகாரி கே.பேரின்பராஜா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட 231 ஆவது இராணுவப் பிரிவின் பிரிகேடியர் மேஜர் ஜெனரல் கே.எச்.பி. பாலித்த பெர்னாண்டோ, மட்டக்களப்பு பொலிஸ் பரிசோதகர் ஏ.ஏ. வாஹித், தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி உபாலி ஜெயசிங்ஹ உள்ளிட்ட பல பொலிஸ் உயர் நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஒ-10)

## காத்தான்குடியில் நேற்று பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக.18

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீடொன்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் காத்தான்குடி - பதுறியா வீதியிலுள்ள மரைக்கார் லேனில் வசித்துவரும் 33 வயதான எம்.சித்தி நழீபா என்று முதல் கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயான இவரது சடலம் தற்போது காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10)




கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற திருப்பழுகாமம் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை தீ மூட்டும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது திருப்பழுகாமம் கேணிக்கரைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து தீக்கட்டை எடுத்துவரப்பட்டு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மா.கு.தட்சணாமூர்த்தி நம்பியாரால் தீமூட்டப்பட்டு தேவாதிமார் ஆட்டமும் இடம்பெற்றது. இந்த உற்சவத்தில் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ஒ-10)

## கல்முனையை அழகுபடுத்தும் திட்டம்; 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

கல்முனை, ஒக.18

கல்முனை மாநகரத்தை அழகுபடுத்தும் அபிவிருத்தி திட்டத்துக்கு கீழ் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனைத் தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸால் கல்முனைக்குடி பிரதேசத்துக்கு 30 லட்சம் ரூபாவும் சாய்ந்தமருது பிரதேசத்துக்கு 20 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக கல்முனைக்குடி, சாய்ந்தமருது பிரதேச பிரதான வீதியில் நவீன அலங்கார மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



சம்பிரதாயபூர்வமாக வெள்ளிக்கிழமை கல்முனையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எச்.எம்.எம்.ஹரீஸ் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன் வீதி மின் விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கையையும் பார்வையிட்டார்.

இதில் கல்முனை மத்திய குழுத் தலைவர் எம்.ஐ.கரீம் ஹாஜியார் உள்ளிட்ட சிவில் சமூக பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-10)

**துயர் பகிர்கின்றோம்**



விஞ்ஞான பீட விலங்கியற்றுறைப் பேராசிரியர் **நோபிள் சுரேந்திரனின்** பாசமிகு தந்தையார்

**கனகரட்ணம் அல்பேட் சின்னத்தம்பி**

அவர்கள் நேற்று அதிகாலை (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் சங்கமமாகி விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விலங்கியற்றுறைத் தலைவர் மற்றும் ஊழியர்கள், யாழ் பல்கலைக்கழகம் (51080) (4.6.3)

**மரண அறிவித்தல்**



**சண்முகநாதன் சிவதயாளன்**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயைப் புகுந்த இடமாகவும், இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சிவதயாளன் 04.08.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் மூத்த புதல்வனும், பொன்னுத்துரை - சாரதாம்பாள் தம்பதியரின் மருமகனும், சுதாஜினியின் அன்புக் கணவரும், கயூசன், எமிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் (இலண்டன்), சிவகங்கன் (கனடா), சிவகரன் (பிரான்ஸ்), கோசலா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதர்சினி (நியூசிலாந்து), சுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18/08/2014) திங்கட்கிழமை இலண்டனில் இலங்கை நேரப்படி பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(51081)

தகவல் : லயன் ப.செல்லத்துரை
(கைதடி - சிறிய மாமனார்)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

### கனியாததை கனியவைக்கும் பாவிகள்

இப்போது ஆலயத் திருவிழாக்களின் உச்சகாலம். பழவகைகளுக்கு நல்ல பிரியம். அதுவும் வாழைப்பழங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அப்போ, கடைகளில் ஒருவித மஞ்சள் நிறத்தில் குலையாக இருப்பவை என்னவாம்? இவை பழுத்தவை அல்ல வெளுத்தவை என்பதைப் புரிந்துகொள்ளாது, எமது நாக்குச் செத்துவிட்டதா என நினைக்க வைத்துவிடும் இவற்றின் சுவை. தானாகக் கனியாததை மருந்தடித்துக் கனிய வைத்து காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வோர் அசகாய சூரர்கள்தான். பழங்கள் சாப்பிடுவது ஆரோக்கியத்துக்கு நல்லது என்பதை சொல்லாத ஊடகங்கள் அரிது. ஆனால் கனிந்த பழங்களைக் காண்பதுதான் அரிதாகி வருகிறது மாபாவிகளால்.

குறிப்பிட்ட சில சமையல் தேவைகளுக்கு ஈய முலாமிடாத செப்புப் பாத்திரங்களை எம்முன்னோர்கள் தவிர்த்தனர். குறிப்பாக பருப்புச் சமைக்க, மோர் வைத்திருக்க பயன்படுத்தமாட்டார்கள். மீறி உபயோகிப்பின் வாந்தி, வயிற்றோட்டம் எனப் பாதிக்கப்படுவோம். சித்த மருத்துவர்கள்கூட தங்கம், வெள்ளி, பாதரசம் என்பவற்றை உரிய முறையில் புடமிட்டு, நோய்க்கு மருந்தாக்கினர். அது அன்றைய ரசவாதம். இன்றோ இரசாயனம் விசிறப்பட்ட பழங்கள், காய்கறிகள் எம்மைச் சூழ்ந்து கெக்கெட்டமிடுகின்றன. இவற்றையெல்லாம் செரித்து பழுதாகிக் கொண்டிருக்கின்றன எங்கள் வயிறுகள். இனம் புரியாத வியாதிகளினால் விரைவில் வெளுத்துப் பழுத்து விடும் அளவுக்கு இன்றைய ரசவாதத்தின் ஆளுகைக்குட்பட்டுக் கொண்டிருக்கின்றது எமது உடல் கொடும்பாவிகளால்.

முக்கனிகளையும் உற்பத்தி செய்தவர்கள் கொஞ்சக் காலத்துக்கு முன்னர் நெத்தியடிபட்டு விழுந்தெழும்பியிருந்தனர். இந்த நிலை கொய்யா, ஜம்பு என்று தொடர்ந்து இப்போ பப்பாசிப் பழச் செய்கையாளர்களும் புலம்பத் தொடங்கியுள்ளனர். பருவ காலத் தொழிலான பழ உற்பத்தியில் முகம் கொடுக்கும் சிரமங்கள், துன்பங்கள் அவற்றைச் சந்தைப்படுத்தல் வரையும் தொடர்வன. இவற்றை எவ்வகையிலேனும் விற்றுத் தீர்த்தாக வேண்டிய இயற்கையின் நிர்ப்பந்தம் இவர்களுக்கு. அன்றாடம் விற்பதுபோக ஏனையவற்றை வேற்று வடிவில் சந்தைப்படுத்தும் நிதிப்பலமும் பக்க பலமும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சக்திகளுக்கன்றி முடியாது இந்த அப்பாவிகளால்.

*செல்வவேலாயுதம்.*

## 6 மாதங்களின் பின்னர் கிழக்கிலும் பரவலான மழை

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆறுமாத கால வறட்சிக்கு பின் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மட்டக்களப்பில் ஆகக் கூடிய மழை வீழ்ச்சியாக 60 மில்லி மீற்றர் பதிவாகியிருந்த நிலையில் கடந்த ஏழு மாதங்களாக தொடர் வறட்சியே நிலவி வந்தது.

இந்த நிலையில் சனிக்கிழமை மாலை ஐந்து மணியிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஐந்து மணிவரையுள்ள 24 மணித்தியால கால இடைவெளியில் மட்டக்களப்பில் 35.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய அதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்தார். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வீதிகளில் நீர் தேங்கியுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. (ஒ-10)

**தேவை**

லொத்தர் விற்பனை செய்வதற்கு ஆள்கள் தேவை. வடமராட்சியில் உள்ளவர்கள் மட்டும்.

(F/16081) (4.6.3) தொ.பே:077 524 0838



**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**ஆள்சேர்ப்பு அறிவித்தல்**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் சுயவிவரங்களைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை 28.08.2014 இற்கு முன் கிடைக்கத்தக்கதாக **"செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பதவிக்குத் தகுந்த வேதனம் வழங்கப்படும்.

செயலாளர்
அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

18.08.2014 (சி/16082)(6.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
பாலசிங்கம் இராமகிருஷ்ணன்
அவர்களின் அன்புத் தந்தை
**ஒப்பிலாமணி பாலசிங்கம்**
அவர்கள் 16.08.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயருறுவதுடன்,அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/வியாவில் சைவவித்தியாலயம்
காரைநகர் (சி/16085)

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள்,மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்

## மரண அறிவித்தல்



### சிற்றம்பலம்
### சிறீஸ்கந்தராஜா

(உரிமையாளர்-இ.சிற்றம்பலம் அன்ட் கொம்பனி, 25, பழைய சோனகத்தெரு, கொழும்பு - 12)

சுருவில், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா நேற்று (17-08-2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவஞானபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், அபிராமி, Dr. சஞ்சீவன், சரண்யா (Abans PLC Colombo - 3) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி அஞ்சுலன், பிரணவன் (Copal Amba Research PVT Ltd) ஆகியோரின் மாமனாரும் அஷ்வினின் பாட்டனாரும், இராச லெட்சுமி, காலஞ்சென்ற Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருநிலைநாயகி, KVமகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, காலஞ்சென்ற சொரூபராணி மற்றும் தவராணி, கமலராணி K.Vசுவீந்திரன், K.V ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (நெதேன் இன்டஸ்ரீஸ் யாழ்ப் பாணம்) மற்றும் Dr மைத்திரிதேவி, மரகதவல்லி, Dr சிறீகாந்தன், பாலசுப்பிரமணியம், சோமாவதி, காலஞ்சென்ற கீர்த்திசிங்கம், சிவ ராஜா மற்றும் யசோதா, கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம், நந்தினி, பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19-08-2014) செவ்வாய்க் கிழமை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் காலை 9 மணிதொடக்கம் 5 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு 20-08-2014 புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பின்னர் கனத்தை இந்து மயானத்தில் பி.ப. 3 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14 4/1, அருத்துசா லேன்,
வெள்ளவத்தை

தகவல் : மனைவி, மக்கள்,
மருமக்கள்

# புற்றுநோய்ப் பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.18

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு 80 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடந்த 14 ஆம் திகதி வந்துசேர்ந்துள்ளன. குறித்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை அமைத்துக் கொடுத்த ஹலோ - ரஸ்ட் நிறுவனத்தினாலேயே இந்த உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரம் தெரிவித்தது.

எக்ஸ் - றே இயந்திரம் உட்பட நவீன முறையில் சிகிச்சையளிக்கக்கூடிய மின் இலத்திரனியல் உபகரணங்கள், நவீன வசதியுடன் கூடிய நோயாளர் கட்டில்கள், மெத்தைகள், தளபாடங்கள், போன்ற மருத்துவ உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை பெண்களுக்கான புற்று நோய்ச் சிகிச்சை விடுதி மிகவிரைவில் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து அங்கு மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (36)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

LED TV SAMSUNG SLIM புத்தம் புதிய, மிக அண்மையில் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட SAMSUNG SMART SLIM HD 3D 40 அங்குல TV விற்பனைக்குண்டு, 6000 தொடர்
தொடர்பு: 078 872 6237

வீடு வாடகைக்குண்டு
நல்லூர் அரசடி வீதியில் சகல வசதிகளுடனிணைந்த வீடு வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:077 5768321

மென்டலின் சிவகுமார் சர்மா
அவர்களின்
'லலித ஷேத்ரா'
வழங்கும்
இந்திய பிரபல கட வித்துவான்
**பத்மஸ்ரீ திரு.T.H. விக்ந விநாயகராம்** அவர்களின்
**சதுர் கட லய சமர்ப்பணம்**

அணி செய் இந்தியக் கலைஞர்கள்

இசை :- திரு.மகேஷ் விநாயகராம்
மென்டலின் :- திரு. வி. சிவகுமார்
கெத்து வாத்தியம் :- திரு. நீ. ராஜாராமன்
மிருதங்கம் :- திரு. நீ ராமகிருஸ்ணன்
கெஞ்சிரா :- திரு. செ. ஸ்வாமிநாதன்
முகர்சிங் :- திரு. ஏ. கணேசன்

18-08-2014, மாலை 4.00 மணி
யாழ். வீரசிங்கம் மண்டபம்

ஆசன முற்பதிவுகளுடன் அனுமதி இலவசம் : 0775858079

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஏழாலை மண்ணில்
08
*
04
*
1929



இறைபதம் தன்னில்
29
*
08
*
2013

### அமரர் இராசம்மா சபாநாயகம்

திதி: அபரபக்க நவமி (18.08.2014)

அன்பின் தெய்வமே!
அன்பு வழிகாட்டி அறிவுதனை ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ இனிய வழிகாட்டி
எம்மையெல்லாம் ஆளாக்கிய தெய்வமே!
நீங்கள் இம்மண் நீத்து ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்.
கலையாத நினைவுகளுடன் - உங்கள் ஆத்மா
சூராவத்தை முத்துமாரி அம்மன் பாதமதில் சேர்ந்து
சாந்திபெறுகவென பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"இராச சபா"
சூராவத்தை, சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(51084)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் இணைச் செயலாளர், பொதுச் சேவையாளர் மற்றும் சிறந்த கிரிக்கெட் வீரரும், ஸ்ரான்லி கல்லூரியின் பழைய மாணவருமாகிய

**கனகரத்தினம் நாதன் (B.A)**

அவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருந்து 01.08.2014 முதல் பாதுகாப்பு பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு மனதாரப் பாராட்டுவதுடன், இவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
யாழ். பல்கலைக் கழகம் - யாழ்ப்பாணம்.

(51085)

## 5 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



### அமரர்
### சுப்பையா
### வைத்திலிங்கம்

தோற்றம்
18
*
07
*
1936

மறைவு
13
*
08
*
2009

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் சிகரமாய்
எம் வாழ்வின் ஒளியாய் எமக்கெல்லாம்
சுமைதாங்கியாய் நின்று
எம் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
எம் தெய்வமே!
எம்மைவிட்டுப் பிரிந்த துயர்தனை
சுமந்த வண்ணம்
இன்றைய தினம் உங்கள்
ஐந்தாம் ஆண்டு நினைவு நாளில்
நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம்

கோவில் வாசல்
இணுவில் மேற்கு,
இணுவில்
(கோபுரம் அரிசி ஆலை, வவுனியா)

(51086

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



**திருமதி பாக்கியரத்தினம் சிவலோகநாதன்**
**(ஓய்வுபெற்ற ஆசரியர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை)**

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வத்தளையை வசிப்பிடமாக கொண்டவருமான பாக்கியரத்தினம் சிவலோகநாதன் 16.08.2014 சனிக்கிழமை அவரது இல்லத்தில் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சிவலோகநாதனின் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிமுத்து யோகம்மா தம்பதியினரின் அருமை மகளும், செல்லப்பா பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், தனபாலரத்தினம், மற்றும் பத்மாவதி சபாரத்தினம், இரத்தினம்மா, தனபாலசிங்கம், Dr.கணேசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாலன் (லண்டன்), சிவயோகம் - ராதி (ரொரண்டோ) சிவரத்தினா - ரதனி (வன்கூவர்), சிவசொரூபி - ரூபி (லண்டன்), சிவானந்தன்(USA), கணேஸ்வரன், Dr.பரணீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகீஸ்வரி, கனகரத்தினம், சுகுமார், வாசுதேவா, பெற்றி(Betty), அருளினி, நிர்மலா ஆகியோரின் மாமியாரும் ஹர்சினி, யஸ்வினி, தனுதன், சோனியா, லோகன், குமார், சச்சினி, மனோஜன், மதீஷீ, கிருபாஷினி ஆகியயோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அவரது இறுதிக் கிரியைகள் 20.08.2014 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கெரவலப்பிட்டிய பொது மயானத்துக்கு காலை 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

இல.29/9,நோபட் மாவளகே மாவத்தை,
மருதானை வீதி
ஹெந்தளை, வத்தளை.

தகவல்
குடும்பத்தினர்.
+94(0)112933565

# ஐ.நாவின் விசாரணைகள் சுதந்திரமாக இருப்பதில்லை

## இந்திய மனித உரிமை பணியாளர் அவ்டேஸ் கௌசல் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.18

போரில் சிறுவர்களையும் - மனித கேடயங்களையும் பயன்படுத்தியமைக்கு கடுமையான தண்டனை கோருவேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்திய மனித உரிமை பணியாளார் அவ்டேஸ் கௌசல்.

சகலருடைய மனித உரிமையையும் நிலைநாட்டுவதற் காகவே ஐ.நா. ஏற்படுத்தப்பட்டது. எனினும் சில வேளைகளில் ஐ.நா. முன்னெடுக்கும் விசாரணைகள் சுதந்திரமாக இருப்பதில்லை. தனிப்பட்ட நலன்களை உள்ளடக்கியதா கவும் அவை காணப்படுகின் றன. - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"அதனாலேயே ஐ.நா. விசாரணையொன்றை ஆரம்பித்தாலும் கூட அதற்கு புறம்பாக சுயாதீன விசாரணையொன்றை இலங்கை குறித்து மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

சர்வதேச ஆலோசனைக்குழு மேற்கொள்ளும் போர் குறித்து பொறுப்புக் கூறல் விசாரணை சுதந்திரமான பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பறுவதை உறுதிசெய்யும். ஆலோசனை குழுவில் நான் பலவந்தமாக காணமற் போகச் செய்யப்பட்டோர் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து கவனம் செலுத்துவேன்- சிறுவர்களைப் போருக்குப் பயன்படுத்தியது மற்றும் மனித கேடயங்களாக பயன்படுத்தியது போன்ற விடயங்களுக்கு கடுமையான தண்டனை கோருவேன்.

இலங்கையில் நிலவிய சூழ்நிலை குறித்த முழுமையான அணுகுமுறையொன்றை அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் எடுக்க வேண்டும்- அமெரிக்கா பொலிஸ்காரனாக செயற்படுவதை தவிர்க்க வேண்டும். பொது மக்கள்-குழந்தைகள் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களை நாங்கள் மறக்க முடியாது. போர்க் குற்றங்களில் ஈடுபட்ட முக்கிய நாடு அமெரிக்கா"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# எதிரான அமைச்சர்கள் குறித்து அறிக்கை கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.18

அரசுக்கு எதிரான அமைச்சர்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளை விமர்சனம் செய்து வரும் அமைச்சர்கள் தொடர்பிலேயே அவர் அறிக்கை தயாரிக்குமாறு கோரியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

விரைவில் தேசிய ரீதியான தேர்தல் ஒன்று குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தினால் ஜனாதிபதி இவ்வாறான ஓர் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில அமைச்சர்கள் பகிரங்கமாகவே அரசுக்கு எதிராகப் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது. அதேவேளை, சில அமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இரகசிய பேச்சு நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதையடுத்தே கட்சியின் மறுசீரமைப்பு பணிகளில் ஆளும் கட்சி தீவிரம் காட்டி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## தொடர்ச்சிகள்

### இலங்கையின்

அமைய நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை இலங்கை அரசு, ஏற்கனவே, மனித உரிமைகள் குழுவிடம் கையளித்துள்ளது. அதே வேளை, சிவில் சமூகத்தின் சார்பிலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றின் அடிப்படையில், இலங்கையிடம் பல்வேறு விவகாரங்கள் குறித்து கேள்வி எழுப்பப்படவுள்ளது. முக்கியமாக, போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக நம்பகமான - நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?, அது தொடர்பான இராணுவ விசாரணைகள் எந்த நிலையில் உள்ளன?, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பதிலளிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு எதிராக அரசியல் உள்நோக்கத்துடன் எடுக்கப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள், மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், இனப் பாகுபாட்டை ஒழிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், பெண்கள் - சிறுவர்கள் மீதான வன்முறைகள், சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் மற்றும் ஒன்றுகூடும் உரிமை மறுக்கப்படுவது, வாழும் உரிமை, பொறுப்புக் கூறல், தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் கூட்டத் தொடரில் இலங்கையிடம் கேள்விகள் எழுப்பப்படவுள்ளன. (ற-5)

### பாப்பரசரின்

வரையிலும் உரிமை கோரப்படவில்லை. அதையடுத்தே பொதுமக்கள் இவ்வாறு சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கான பயணத்தின் போது மடுத் திருத்தலத்துக்குச் சென்று அங்கு போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சந்தித்து ஆசீர்வாதம் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது இந்த நிகழ்ச்சி உள்ளிட்ட பயண ஒழுங்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாப்பரசரின் பயணத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, ஏற்கனவே வத்திக்கானில் இருந்து வருகை தந்த அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் தனித்தனியாக மடுவுக்குச் சென்று ஆராய்ந்துள்ளனர். இந்த நிலையில், மடுத் திருத்தலத்தில் ஆவணித் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, ஆளில்லாத - சிறிய ரக விமானம் ஒன்று கடும் இரைச்சலுடன் வானில் பறந்ததை அங்கிருந்த மக்கள் அவதானித்தனர்.

இந்த சிறியரக விமானம் தமக்குச் சொந்தமானதல்ல என்று விமானப்படை பேச்சாளர் விங் கொமாண்டர் பத்மன் டி கோஸ்தா தெரிவித்துள்ளார். அதனால் மடுவில் பறந்த விமானம் யாருடையது என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது. பாப்பரசரின் மடுப் பயணத்தை திசை திருப்பும் நோக்குடன் பறக்க விடப்பட்டதா என்ற கோணத்திலும் பொது மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

சிறிய ரக ஆளில்லா விமானங்களை தனியார் நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. அத்தகைய விமானங்கள் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும். அப்படி பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படாமல் எந்தவொரு விமானமும், ஆளில்லா சிறிய ரக விமானமும் வானில் பறக்க விடமுடியாது. இந்தநிலையில் குறித்த மர்ம விமானத்தின் மீதான சந்தேகங்கள் இன்னமும் அதிகரித்துள்ளன. (ற-5)

### தமக்கிடையிலான

தள்ளிப்போட்டு வருகின்றனர் - இவ்வாறு தெரிவித்துள்ளார் உற்பத்தி திறன் அபிவிருத்தி அமைச்சர் பஷீர் சேகுதாவுத். யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன் தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜனாதிபதி தேர்தல் வரவுள்ளது. அது மட்டுமல்லாது நாடாளுமன்றத் தேர்தலில் கூட பேரம் பேசும் சக்தியாக சிறுபான்மை இனங்கள் இருக்க வேண்டும்.

அந்த எண்ணம் சிறுபான்மை இன மக்களிடம் துளிர்விட வேண்டும். அதனைச் செயற்படுத்த சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சிறுபான்மை இன மக்களை ஒன்றிணைக்கும் வல்லமை கட்சித் தலைவர்களிடமே உள்ளது. அதன் மூலமாகவே எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் சிறுபான்மைக் கட்சிகள் பிரதானமானவையாக இருக்க வேண்டும். நாம் ஒன்றிணைந்து செயற்படாத தன்மையைத் தற்போது அனுபவித்து வருகிறோம்.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முன்வரவில்லை. தவிர்க்க முடியாத நிலை அதனைத் தவிர வேறு சாதகமான தன்மை இருக்கவில்லை. ஆனால் கடந்த காலத் தவறுகளை மீண்டும் விட வேண்டும் என்றில்லையே. தீர்வைப் பெறுவதற்கு முயற்சித்த வெற்றி தனித்தனியே நடக்கப் போவதில்லை. எனவே ஒற்றுமையாய் செயற்பட வேண்டும். வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் இணைவு முக்கியம்.

மூன்று இனங்களும் அரசியல் ரீதியாக, இன ரீதியாக ஒன்றுபடத் தவறினால் மத ரீதியாக குழறுபடி நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு. மதச் செயற்பாடுகளுக்கு மேலாக அரசியல் செயற்பாட்டிலும் மதங்கள் மேலோங்கும் நிலை காணப்படுகிறது. எனவே எதிர்காலத்தில் மதத்துவ அரசியல் மாறி இனத்துவ அரசியலாகிவிடும். தெற்காசியாவிலும் இந்த வாய்ப்பு உள்ளது. இது முக்கியமாக சிறுபான்மை இனங்களுக்கு இடையே வரக்கூடாது" - என்று தெரிவித் தார். (ற-14)

### அதிகாலை

கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும், விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

### முகம் எரிந்த

கப்பட்டவராவார்.

வீடொன்றுக்குள் சடலம் ஒன்று காணப்படுகின்றது என்று தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று, சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தோம் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆசிரியையின் முகம், தலை முற்றாக தீயில் எரிந்துள்ளது. அவரது உடலுக்கு அருகே மண் எண்ணெய் 'கான்' ஒன்றும், நாள்குறிப்பேடு ஒன்றும் காணப்பட்டது என்றும், நாள்குறிப்பேட்டில், வேதனை தாங்கமுடியாது இந்த முடிவை எடுத்தேன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது. (ற-109)

### பறிக்கப்பட்ட

கடற்றொழில் அமைச்சுக்குச் சுட்டிக் காட்டியதை அடுத்து அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"வடபகுதி மீனவர்கள் போரின் பின்னர் மீண்டும் தொழில் நடவடிக்கைகளை மெல்ல மெல்ல அபிவிருத்தி கண்டு வரும் நிலையில் அவர்களது தொழில் நடவடிக்கைகளை பாதிக்கும் நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சு மேற்கொள்ளாது.

வடபகுதி கடற்பரப்புக்குள்தான் அதிகமாக இந்திய மீனவர்களது அத்துமீறல் நடவடிக்கைகள் இடம்பெறுவதால் படகுகளை மீள வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கமாட்டோம்"- என்று அமைச்சர் மீனவர்களுக்கு உறுதியளித்துள்ளார். (ற-14)

### மீனவர்

ளது பிரச்சினை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காணும் பொருட்டு உயர்மட்டப் பேச்சு நடைபெற்று வருகின்றது.

அந்த வரிசையில் அடுத்தகட்டப் பேச்சு எதிர்வரும் 29 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தப் பேச்சில் இலங்கை சார்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சியும், அமைச்சின் ஆலோசகர் எஸ்.சுபசிங்க, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கமலத் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### இலங்கையின்

அரசு வெளிநாட்டில் அதனைத் திருப்திப்படுத்தும், அதன் அனுதாபத்தை பெறும் முயற்சிகளில் இறங்கியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-சி)

### திருமலையில்

தெரிவித்துள்ளனர்.

பள்ளிவாசல் உடைக்கப்பட்டதை மறுக்காத இராணுவத்தினர், உணவகம் ஒன்றை அமைப்பதற்காக அடித்தளம் போடப்பட்டபோது தவறுதலாக பள்ளியின் ஒரு பகுதி உடைந்துவிட்டதாக உள்ளூர் அரசியல்வாதிகளிடம் கூறினர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

உண்மை நிலையை அறிவதற்காக நாம் அங்கு மக்களுடன் சென்றபோது இராணுவத்தினர் எம்மைத் தடுத்து விட்டனர் என்றும் இம்ரான் மஹ்ரூப் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, அப்பகுதி யில் பள்ளி வாசல் ஒன்று இருக்கவில்லை என்றும் இல்லாத பள்ளிவாசலை எப்படி உடைக்க முடியும் என்றும் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா கேள்வி எழுப்பியுள் ளார். (ற-சி)

### மதுவரிக்

வைத்து பக்தர்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. அதனைவிட சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன என்று மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி என்.நந்தகுமார் தெரிவித்தார். (ற-14)

### வாழ்வாதாரத்து

றொழில் சங்கத்துக்குச் செலுத்த வேண்டும் என்று பாசிக் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது. அதற்கேற்ப தாங்கள் முறையாக பணம் செலுத்தி வந்தோம் என்று தெரிவித்துள்ளதுடன், இந்தநிலையில் தமக்கு எதுவும் அறிவிக்காது நேற்றும், நேற்றுமுன்தினமும் 4 பயனாளிகளுடைய படகுகள், இயந்திரங்கள், தூண்டில் உபகரணங்கள் என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கடற்றொழில் நீரியல் வள உத்தியோகத்தரும் வந்திருந்தார். மாவட்ட அரச அதிபர்தான் கூறினார் என்று அவர் தெரிவித்ததால் நாங்கள் எதிர்க்கவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர். ஆயினும் பின்னர் அரச அதிபரிடம் சென்று கேட்ட போது அவ்வாறு பறிமுதல் செய்யும்படி தான் கூறவில்லை என்று அவர் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பாசிக் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

எமது நிறுவனத்தால் கொக்கிளாயில் 10 பயனாளிகளுக்கு 4 வருடத் திட்டத்தில் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான படகுகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட படகுகளில் 4 படகுகளை ஒரு பயனாளி பயன்படுத்தி வந்தமை அறியப்பட்டதை அடுத்து, வழங்கப்பட்ட உதவி ஒரு பயனாளிக்கு செல்வதை தவிர்க்கும் நோக்குடனும், ஏனைய பயனாளிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படாத வகையிலும் இது தொடர்பான விசாரணை மேற்கொள்வதற்காக படகு மற்றும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட உதவியை முதலாளித்துவ ரீதியில் ஒருவர் மட்டும் பயனடைவது பயனற்றது. பாதிக்கப்பட்ட மக்கள் இந்த திட்டத்தால் நன்மை அடைய வேண்டும் என்பதற்காகவே வழங்கப்பட்டது. இந்த 4 படகுகளும் ஒரே உறவினர்களின் பெயர்களில் வாங்கப்பட்டு ஒருவர் மட்டும் பயன்படுத்தி வருகிறார். அதனால் ஏனைய பயனாளிகளில் இருவர் நிறுவனத்துடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது."- எனத் தெரிவித்தனர். (ற-14)

### புற்றுநோய்

பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"செல்வாபுரம் திருமுருகண்டி கிளிநொச்சியைச் சேர்ந்த பிரசாத் அஜந்தா (வயது-23) என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி சத்தி, வயிறு, வீக்கம் போன்ற நோய்களுடன் பலாலி படைத்தளத்தில் உள்ள வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவருக்கு புற்றுநோய் இருந்ததைக் கண்டறிந்தனர். அதையடுத்து அவரை புற்று நோய் விடுதியில் சேர்த்து சிகிச்சை வழங்கப்பட்டது.

இவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதையும் அறியக் கூடியதாக இருந்தது. இந்நிலையில் இவருக்கு சூலகத்தில் ஏற்பட்ட புற்று நோயானது அதிகரித்து குடலில் தடைகளை ஏற்படுத்தியமையால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இவருடைய உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை. காரணம் ஏற்கனவே இவருடைய உயிரிழப்பு புற்று நோயால் ஏற்பட்டதென குறிப்பிட்ட வைத்தியர் பரிந்துரை செய்தமையினால் செய்யவில்லை"- என்று தெரிவித்தார். (ற-86)

### தாக்குதலுக்கு

குறிப்பிட்ட சதித்திட்டம் குறித்து தெரிய வந்தது என்றும், அதன் பின்னரே குறிப்பிட்ட நபர் கைது செய்யப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட தாக்குதலை மேற்கொள்ளவிருந்த தற்கொலைக் குண்டுதாரிகள் மாலைதீவிலிருந்தே கேரளா செல்லவிருந்ததால் மாலைதீவிலும் விசாரணைகள் இடம்பெறலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட சுலைமான் தான் இலங்கை யிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரியின் ஆலோசனையின் பேரிலேயே இந்தச் சதித்திட்டத்தைத் தீட்டியதாக விசாரணைகளில் தெரிவித்திருந்தார். (ற-சி)

## குழாய்க் கிணறு அமைப்பதால் நிலத்தடி நீர் உவராகும் நிலை

### சூழலியலாளர்கள் கவலை

தென்மராட்சி, ஓக.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களில் இயந்திரம் மூலம் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இது குறித்து சூழலியலாளர்கள் நிலத்தடி நீர் உவர்த்தன்மை ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்தனர்.


கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் குளங்களுக்கு அருகில் உள்ள வயல் உரிமையாளர்கள் அவற்றிலிருந்து நீர்பாய்ச்சி உள்ளனர். போதிய நீர் கிடைக்காததால் பல வயல்களில் போதிய விளைச்சல் கிடைக்கவில்லை. இதனால் பலர் வயல்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக குழாய்க் கிணறுகள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளதால் குடியிருப்புக் காணிகள் உட்பட கிணறுகளில் நீர்மட்டம் 3 மீற்றர் தொடக்கம் 5 மீற்றர் வரை குறைந்துள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாகவும் குழாய்க்கிணறு அமைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும் இந்த நிலை உருவாகி வருகிறது. குழாய்க் கிணறுகளிலிருந்து பெருமளவு நீர் தினமும் வெளியேற்றப்படுவதால் கடல்நீர் குழாய் அமைந்துள்ள பகுதிகளைத் தேடி வரவாய்ப்பு உள்ளது. இதனால் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் உவர் நீராக மாறும் அபாயம் காணப்படுகிறது.

இந்த நிலையில் மாகாண சுற்றாடல் அமைச்சு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வயல்களில் குழாய்க் கிணறு அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

(வ-9)



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாடு முழுவதும் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் ஆர்வத்துடன் பரீட்சை எழுதுவதற்காகச் சென்றபோது... (வ-17-135)

## குடிதண்ணீர் விநியோகத்துக்கு 7 லட்சம் ரூபா நிதி தேவை

### கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்

கரணவாய், ஓக.18

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள சுமார் 7 லட்சம் ரூபா நிதி தேவையாகவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாக கரவெட்டி பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள கிணறுகள் பல உவர் நீராக மாற்றமடைந்து வருவதுடன் குடிதண்ணீருக்கு சில இடங்களில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 10ஆயிரம் வரையானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குறித்த பகுதிக்கு நீர் விநியோகம் மேற்கொள்வதற்கு சுமார் 7 லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை- 14 கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கு வேண்டிய குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு, கரணவாய், கரணவாய் கிழக்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி தெற்கு, மத்தொனி, கரவெட்டி மத்தி, கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, துன்னாலை ஆகிய பகுதிகளுக்கே குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை- குடிதண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கரவெட்டி பிரதேச சபையால் சில பகுதிகளுக்கு நீர்விநியோகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

## மழைபெய்து நிலம் குளிர்ந்தது

### யாழ்.குடாநாட்டு மக்கள் மகிழ்ச்சி



யாழ்.முற்றவெளி தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்றுக் காலை மழை நீர் தேங்கிநின்ற காட்சி

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.குடாநாட்டில் குறிப்பிட்ட சில இடங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று அதிகாலை சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு அதிகமான நேரம் மழை பெய்தது.

கடும் வெப்பம், வறட்சியால் துவண்டு போயிருந்த மக்கள் ஓரளவு பெய்த மழையால் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்தனர். யாழ்ப்பாணத்தின் அநேக பகுதிகள் மற்றும் தென்மராட்சியில் மழை பொழிந்ததால் காலநிலை இதமாக இருந்தது.

வடமராட்சிப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மழை பெய்துள்ளது. வவுனியாவில் கடுமையான மழையும் கிளிநொச்சியில் சுமாரான மழை வீழ்ச்சியும் கிடைத்துள்ளது.

அதேசமயம் புழுதி பறந்த நிலையில் காணப்பட்ட விவசாய நிலங்கள் மழையால் குளிர்ச்சியடைந்ததையடுத்து நெல்வயல் நிலங்களை பண்படுத்தக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் போதிய மழைவீழ்ச்சி கிடைக்காமையால் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் மற்றும் கால்நடைகளுக்கான நீர்த்தேவை என்பன தொடர்ந்தும் கஷ்டமான நிலையிலேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு முழுவதும் 269.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக திரு நெல்வேலி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ஓ-86-9-135-17)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சாவகச்சேரி ஆதார மருத்துவமனை இயன் மருத்துவப் பிரிவுக்கான மருத்துவ உபகரணங்கள் சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்டத்தின் இரண்டாவது உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வை.தியாகராசாவினால் மருத்துவமனை அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டன. (வ-9)

## அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்கள் இடிக்கப்படும்

***நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்படும் சிமெந்து கொங்கிறீற் கட்டடங்கள் சபையின் அனுமதி பெறப்பட்டே அமைக்கப்பட வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

அவ்வாறு அனுமதி பெறாத கட்டடங்கள் பிரதேச சபைகள் சட்டத்துக்கு அமைவாக சபையால் இடித்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(வ-7)

## வடமராட்சி மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், ஓக.18

தென்மராட்சி பிரதேசத்தில் மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்ட பிரதேசங்களிலிருந்து பெருமளவு மாடுகள் வடமராட்சிப் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதால் அங்குள்ள மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக வடமராட்சிப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் வரணி தொடக்கம் எழுதுமட்டுவாள் வரையான வீதியின் கிழக்குப் பகுதியின் சில இடங்களில் மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளிலிருந்து மாடுகள் வெளியே கொண்டு செல்வது சாவகச்சேரி கால்நடை மருத்துவரால் தடைசெய்யப்பட்டது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த கால்நடை மருத்துவர் பணிமனையால் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதுடன் மாடுகளுக்கு காதில் அடையாளமுமிட்டு நோயை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

தொடர்ந்து தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதால் காதடையாளம் இடப்பட்ட மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கு கால்நடை மருத்துவர் அலுவலகத்தால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையினால் நடத்தப்படும் இறைச்சிக் கடைகள் கால்நடை மருத்துவரின் நிபந்தனைக்கு அமைய மாடுகள் கொள்வனவு செய்ய முடியாததால் இன்னமும் திறக்கப்படவில்லை.

இந்த நிலையில் வடமராட்சிப் பகுதியில் உள்ள இறைச்சிக் கடை உரிமையாளர்கள் தென்மராட்சிப் பகுதிகளில் காதடையாளம் இடப்படாத பெருமளவு மாடுகளைக் கொள்வனவு செய்து நடத்தியும், வாகனங்களில் ஏற்றியும் வடமராட்சிப் பகுதிக்குள் கொண்டு செல்கின்றனர்.

வடமராட்சிப் பகுதிகளில் உள்ள கொல்களங்களில் குறித்த நிபந்தனை நடைமுறைப்படுத்தாததால் பெருமளவு மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சிக் கடைகளில் விற்கப்படுகிறது.

அத்துடன் கொண்டு வரப்படும் மாடுகள் அங்குள்ள தரவைகளில் மேய்ச்சலுக்கு விடப்படுவதால் வடமராட்சிப் பகுதியிலும் இந்த நோய் பரவக் கூடிய அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தனர். தென்மராட்சிப் பகுதியிலிருந்து வடமராட்சிப் பகுதிக்கு மாடுகள் கொண்டு வருவதைத் தடை செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்மராட்சி பிரதேசத்தில் காதடையாளம் உள்ள மாடுகள் மட்டும் அவற்றின் உரிமையாளர்களால் கிராம அலுவலரின் பரிந்துரை பெற்று விற்க முடியும் என்னும் நிபந்தனை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் மாடுகளுக்கு கால் வாய் நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து பண்ணையாளர்களை விழிப்பாக இருக்குமாறு கரவெட்டி அரச கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (வ-9-108)

# மரண அறிவித்தல்



## தங்கவேல் தில்லைநாதன்

*(தில்லை களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)*

பதுளையைப் பிறப்பிடமாகவும் இல. 107, மூத்த விநாயகர் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் தில்லைநாதன் நேற்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேல் -சிர் நாமணி தம்பதியரின் அன்பு மகனும்,பதிவதனியின் அன்புக் கண வரும்,காலஞ்சென்ற ஆறுமுகம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,ஜிந்தூரகன் (ஜீன் கேமாஸ் கம்பனி பி.வே. லிமிடெட்) சங்கீதா (கனகரட்ணம் மகா வித்தியாலயம் A/L கலைப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும்,தயாளதுரை (இந்தியா) முத்துக்குமார் (மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்),நவமணி,பத்மநாதன் (ஜெயா களஞ்சியம்,றக்கா வீதி), கதிர்காமநாதன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,தேவிவிமலா (கனடா),பாலகாந்தன் (இலங்கை வங்கி, மன்னார்), சுசிலகாந்தன் (ஜேர்மனி), தயாளகாந்தன் (கனடா),குணாளகாந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
மகன் (ஜீன்)
0770754806,0777159179

# இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக.18

மென்டலின் சிவகுமார சர்மாவின் 'லலித ஷேத்ரா' வழங்கும் "சதுர் கட லய சமர்ப் பணம்" நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்தியாவின் புகழ் பெற்ற கட வித்துவான் ரி.எச். விக்ந விநாயகராம் நான்கு கடங்கள் ஒன்றுசேர இசை நிகழ்ச்சியை வழங்க வுள்ளார்.

# சிறுவன் மீது சூடு

கொழும்பு, ஓக.18



கொலன்னாவை, சிங்கபுர பிரதேசத்தில், கடைக்கு சென்றுகொண்டிருந்த 16 வயது சிறுவனொருவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீல நிற வாகனத்தில் வந்த சிலரே, இந்த சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும், காயமடைந்த சிறுவனுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்கான காரணம் தெரியவரவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற)


## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்ஸின் மாபெரும் மலிவு விற்பனை

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு மீண்டும் அனைத்து நூல்களுக்கும் 20% விலைக்கழிவு வழங்கப்படுகிறது.

நீரால் சேதமடைந்த ஒரு தொகுதி நூல்கள் 50% விலைக்கழிவில் விற்பனையாகின்றன.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு தேவை

K.K.S றோட், கொக்குவில்,இணுவில் தாவடி போன்ற இடங்களில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. 0786155929,0213205939

## துளசி மஹால் தொடர்மாடி வாடகைக்கு
நல்லூர்

நாள், கிழமை, மாத வாடகைக்கு துளசி மஹால் தொடர்மாடி வீடுகள் உண்டு.
சாப்பாடும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படும்.
நல்லூர் உற்சவ தினங்களையொட்டி பக்த கோடிகளுக்கு கழிவு சலுகை வழங்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 071 328 6890 or 021 221 9539

(C/16050)(7.6.3)

## இப்போது எமது காட்சியறையில்

Unregistered Honda Fit Hybrid GP1
ஜப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது



AQUA SHOWROOM
077 3 169 433

- Smart fine selection
- Year 2013
- SKY BLUE Color
- SMART INTELLIGENT KEY
- Central lock
- Auto folding winker mirror
- Leather seats
- Low mileage
- Original DVD MP3 USB BT
- Reverse Camera
- Factory fitted
- Dual Multifunction steering
- Cruise control
- HID lights
- Scuff welcome lights
- Interior illumination
- Original Carpets

You Too Can Have A Car
ராஜா பிளாசா, 74, மலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

## புலமைப்பரிசில் மாணவர்களிற்கான விசேட சலுகை

☆ இலவசமாக ஆங்கிலம் கற்க அரிய வாய்ப்பு

Pre-starters முன்பள்ளி, தரம் 1, 2 | Young Learners தரம் 03, 04, 05
Teens | தரம் 06-11 O/L தயார்படுத்தல் | General User ஏனையோர்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் அடிப்படையில் இருந்து கற்கலாம்.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
* பாடஅலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.

ALISON DIGILITE — கேம்பிரிட்ஜ் ஆங்கிலம்

51/3, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (பொற்பதி பிள்ளையார் கோவிலருகில்)
06, வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு, இணுவில்
Call/SMS 0779866409

## Angel International School
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

School Re-Opening On 2nd September 2014

புதிய தவணை ஆரம்பம் 02.09.2014

New Addmissions are available from 25th August 2014

புதிய அனுமதிகள் 25.08.2014 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்

***Angel International School is the first and the largest International School in the Jaffna Peninsula with 1000+ Students.***










Phone:021-320-4024

### Contact information

Director:Rev Sam Rajasuriar -0777238300

Principal:Dr.Noel A.Vimalendren.J.P 0772210173

e-mail:angelism2006@gmail.com

Website:aismanipay.info

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## மீண்டும் சாதனை படைத்தது வெற்றித்தேர்வு

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சாதனை படைப்பதற்கு மீண்டும் வழிவகுத்துள்ளது வெற்றித்தேர்வு வினாப்பத்திரம். மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் வெற்றித்தேர்வு வினாப்பத்திரத்தில் வந்த அத்தனை வினாக்களுமே இறுதிப்பரீட்சை வினாத்தாளில் இடம்பெற்றிருந்தன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்திய மாணவர்களுக்கும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course** Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நானாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General — We do Official Online Registration for Exam Candidates — Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

| | Batches Starts on | |
|---|---|---|
| 20/08/2014@ 9.00am | | 25/08/2014 @ 3.00pm |
| 23/08/2014 @9.00am | | 27/08/2014 @ 9.00am |

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.